வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 16.12.2023 சனிக்கிழமை | இதழ் : 348 | பக்கங்கள் : 12




# மயிலத்தமடுவை பார்வையிட சென்ற தமிழ் எம். பிக்கள் தடுத்து நிறுத்தம்!

## சுமண தேரர் தலைமையிலான குழு அடாத்து

*மட்டக்களப்பு, டிசெ. 16*

மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரவையைப் பார்வையிட சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் தடுத்து நிறுத்தப்பட்டனர். அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் தலைமையிலான அப்பகுதியில் குடியேறிய சிங்கள மக்களாலேயே இவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

மயிலத்தமடுவில் இடம்பெறும் சம்பவங்கள் - தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் அறிவ தற்காகவும் அங்கு நடக்கும்

11



# மக்களும் அரசியல் கட்சிகளும் எம்முடன் இணைய வேண்டும்!

## எம்மை தவறாக சித்திரிக்க முயற்சி பெரமுனவின் மாநாட்டில் மகிந்த!

*கொழும்பு, டிசெ. 16*

நாட்டை சரியான பாதையில் முன்னோக்கி கொண்டுசெல்ல அரசியல் சக்தி அவசியம். அவ்வாறு நாட்டின் பிரபலமான அரசியல் சக்தியாக பொதுஜன பெரமுன விளங்குகிறது. எமது சக்தியை மேலும் பலப்படுத்த நாம் நாட்டு மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் அழைப்புவிடுக்கிறோம் - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது. அங்கு உரையாற்றியபோதே

11



# தீர்வு விடயத்தில் இந்தியாவை நாம் இன்னும் நெருங்கவில்லை

## உண்மையை ஏற்றார் சிறீதரன் எம். பி.

### நான் கட்சி தலைவரானால் புதுடில்லியில் பணிமனை சுமந்திரன் தலைவரானால் முழுவீச்சில் செயல்படுவேன்!

யாழ்ப்பாணம், டிசெம்பர் 16

**இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் நாங்கள் இன்னமும் இந்திய அரசை நெருங்கவில்லை. மோடி அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை வளர்க்கவேண்டிய தேவை தமிழரசு கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் உண்டு. தமிழரசு கட்சியின் தலைவராக நான் தெரிவானால், புதுடில்லியில் பணிமனை ஒன்றை அமைத்து இந்தியாவுடன் நெருங்கி செயல்படுவதற்கான பணியையே முதலில் ஆரம்பிப்பேன் - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைக்கு போட்டியிடும் வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்**

அத்துடன், தமிழரசு கட்சியின் தலைமையை நான் பெற்றாலும் இரண்டு வருடங்களே தலைவராக இருப்பேன். தலைமைக்கான போட்டியில் எம். ஏ. சுமந்திரன் வெற்றி பெற்றால் நான் அவரின் கீழ் இன்னும் முழுவீச்சுடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளேன் என்றும் அவர் கூறினார்.

டான் தமிழ் ஒளி தொலைக் காட்சியின் ஸ்பொட்லைற் நிகழ்ச்சிக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த விடயங்களின் முக்கிய

11



# பெரமுனவின் தலைவராக மீளவும் மகிந்த

*கொழும்பு, டிசெ. 16*

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவராக மீண்டும் மகிந்த ராஜபக்ஷ ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

அந்தக் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாடு நேற்று கொழும்பு சுகததாஸ விளையாட்டு

11

# 3,100 டெங்கு நோயாளர்கள் வடக்கில் அடையாளம்!

## யாழில் இருவர் மரணம்

## வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர்

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

வடக்கில் கடந்த 11 மாதங்களில் மூவாயிரத்து 100 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டனர். கடந்த வாரத்தில் டெங்கு நோயால் இருவர் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்தனர் என்று வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

11

# அமைச்சர் டிரான் அலஸ்க்கு வெளிநாட்டில் இரு நிறுவனங்கள்!

## பண்டோரா ஆவணத்தால் அம்பலம்

*கொழும்பு, டிசெ. 16*

கடல் கடந்து பல சொத்துகளை வைத்திருக்கும் நபர்கள் பட்டியலை பண்டோரா ஆவணம் வெளியிட்டுள்ள நிலையில் அதில் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்

11



## கீரிமலை ஜனாதிபதி மாளிகை

# காணியை அளவிடும் பணி மக்கள் எதிர்ப்பால் நிறுத்தம்!

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

கீரிமலை ஜனாதிபதி மாளிகையை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சுவீகரிக்க சென்றபோது மக்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்ட நிலையில் அவர்கள் திரும்பி சென்றனர்.

கீரிமலை ஜனாதிபதி மாளிகையை அளவீடு செய்வதற்கு நில அளவை திணைக்களம் நேற்று வெள்ளிக்கிழமை அங்கு வருகை தந்தது.

இந்நிலையில், அந்த காணியின் அளவீட்டுக்கு

11

# நாம் சிங்கம் போன்றவர்கள் எங்கள்மீது கல் எறியாதீர்கள்!

## பஸில் ராஜபக்ஷ எச்சரிக்கை

*கொழும்பு, டிசெ. 16*

"நாங்கள் சிங்கத்தைப் போன்றவர்கள் - எங்கள் மீது கல் எறிந்தால் திரும்பி பார்த்து அது யார் என்று பார்ப்போம். எங்கள் மீது கற்களை எறியாதீர்கள். இனிவரும் காலங்களில் பார்த்துக் கொள்வோம்" - இவ்வாறு எச்சரித்துள்ளார் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில்

11

## பொன்னாவெளி சுண்ணக்கல் அகழ்வு ஆய்வு:

# பொதுமக்களின் கடும் எதிர்ப்பால் அதிகாரிகள் திரும்பி சென்றனர்!

*கிளிநொச்சி, டிசெ. 16*

பொன்னாவெளி கிராமத்தில் சுண்ணக்கல் அழ்வை முன்னெடுக்கும் விதத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள சென்ற கனியவள திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய திணைக்கள அதிகாரிகளையும் பணிகளை மேற்கொள்ள விடாது தடுத்த பிரதேச

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

கடந்த சில மாதங்களாக அவ்வப்போது நாட்டில் தாங்கள் கருத்துக்கணிப்புகளை நடத்தியதாகக் கூறிக்கொண்டு சில அரசசார்பற்ற நிறுவனங்கள் அறிக்கைகளை வெளியிட்டு வந்தன.

அப்போதெல்லாம் அவர்களின் கணிப்புகளில் மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் கணக்கில் எடுக்கப்படவும் இல்லை.

'அறகலய'வுக்குப் பின்னர்- ராஜபக்ஷக்களின் சகாப்தம் முடிந்தவிட்டது என்றே மக்கள் மத்தியில் நம்பவைக்க அதீத முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆனால், மகிந்த தரப்பிலோ தேர்தல் ஒன்று நடந்தால் தாங்களே வெற்றிபெறுவோம் என்றே கூறிக்கொண்டிருந்தனர். ஓர் அரசியல் கட்சி அப்படித்தான் கூறவும் வேண்டும்.

ஆனால், அவர்கள் காணாமல் போகவில்லை என்பதை இப்போது நடக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களும் உணர்த்தி வருகின்றன.

சில சிங்கள தேரர்களுக்கு பெயர்சூட்டி - அவர்களையும் ஓர் அமைப்பாக மாற்றி - அவர்களுடன் பிரகடனம் ஒன்றை வெளியிட்ட 'உலகத் தமிழர் பேரவை' என்ற அமைப்பினர் கூட மகிந்த இன்னமும் நிராகரிக்கக்கூடிய அரசியல் தலைமை இல்லை என்பதை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர், தமிழர் அரசியலை - முன்னெடுக்க அருட்பணி எஸ். ஜே. இம்மானுவல் அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்ட உலகத் தமிழர் பேரவை மகிந்தவை போர்க் குற்றாளியாக சர்வதேச நீதிமன்றில் நிறுத்த பிரசாரம் செய்தது. அவர்கள் நடத்திய இனப்படுகொலையை வெளிச்சத்துக்குக் கொண்டுவர பிரசாரம் செய்தது. அதே பெயரில் இப்போது இங்கு வந்தள்ள சிலர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து தமது இமாலய பிரகடனத்தை வழங்கியிருக்கின்றனர்.

இது மகிந்த தரப்பு இப்போதும் இலங்கையில் ஒரு தவிர்க்கப்பட முடியாத சக்திதான் என்பதை அவர்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் என்றே தெரிகிறது.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது.

மேலே சொன்ன கருத்துக் கணிப்புகள், மகிந்த தரப்பை மக்கள் மறந்துவிட்டதாகவே சொல்லியபோது மகிந்த தரப்பின் முக்கிய தலைவர் ஒரு வருடனான சந்திப்பு ஒன்றில், அதுபற்றி இந்த ஊர்க்குருவி அவரிடம் கேட்டது ஞாபகத்துக்கு வருகின்றது.

'இந்த கருத்துக்கணிப்புகள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?' என்று அவரிடம் கேட்ட போது அவர் சொன்னார், 'நாங்கள் இன்னமும் எமது பிரசாரத்தை தொடங்கக்கூட இல்லையே' என்று.

அதாவது கருத்துக்கணிப்புகளில் முன்னே நிற்பதாகக் கூறப்படும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஜே. வி. பியின் தேசிய மக்கள் சக்தியும், ரணில் ஜனாதிபதியாக பதவியேற்ற நாளில் இருந்து தமது பிரசாரத்தை மிகப்பெரிய அளவில் நடத்தி வருகின்றனர்.

ஆனால், ஜனாதிபதி ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவோ பிரசாரம் எதனையும் ஆரம்பித்திருக்கவில்லை.

அதிகம் ஏன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடப் போவதாகக் கூட சொல்லவில்லை. தனது முதலாவது குறிக்கோள், இந்த நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்வதுதான் என்று கூறிக்கொண்டு தனது வேலையை பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அதேபோல, அரசாங்கத்தில் இருந்தாலும் எதிலுமே அதிகம் தலையைப் போடாமல் நடக்கின்ற சம்பவங்களை அமைதியாகப் பார்த்துக்கொண்டு பெரமுன காலத்தைக் கடத்தியது.

தாங்கள் மக்கள் மத்தியில் செல்லாததால்தான் கருத்துக் கணிப்புகளில் மக்கள் தங்களைக் கண்டுகொள்ளவில்லை என்று கூறிக்கொண்டிருந்த பெரமுனவினர், நேற்று தமது இரண்டாவது தேசிய மாநாட்டை மிகப்பெரிய அளவில் நடத்தியிருக்கின்றனர்.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்ற அந்த மாநாட்டுக்காக கொழும்பில் அநேகமாக அத்தனை வீதிகளிலும் பெரமுனவின் தாமரை மொட்டு கொடிகள் பறந்து கொண்டிருந்தமையை காண முடிந்தது.

அந்தக் கொடிகள் பறக்காத வீதிகளே இல்லை என்று சொல்லுமளவுக்கு கொழும்பு அவர்களின் கொடி மயமாகக் காட்சியளித்தது.

சுகததாச உள்ளரங்கு சுமார் ஐயாயிரம் மக்களை மாத்திரமே உள்வாங்கக்கூடிய சிறிய மண்டபம் என்பதால் அதனை நிரப்பி - மாநாட்டை நடத்திக் காட்டுவது பெரமுனவுக்கு பெரிய வேலை இல்லைத்தான்.

ஆனால், தாங்கள் பிரசாரத்தையே தொடங்கவில்லையே என்று இதுவரை கூறிக்கொண்டிருந்த பெரமுன கட்சி, எடுத்த எடுப்பில் மிகப்பெரிய அளவில் - மிகப்பெரிய பொருட்செலவில் பிரசாரத்தை தொடங்கியிருக்கின்றது என்பதை மட்டும் உணரமுடிந்தது.

அரசியல் 'ரேசில்' அவர்களும் இறங்கிவிட்டது தெரிகின்றது. இனி வரும் கருத்துக் கணிப்புகளில் ஏதேனும் மாற்றங்கள் வரவில்லை என்றால்தான் ராஜபக்ஷக்களின் எண்ணம் பிழையானது என்பது தெரியவரும்.!

**- ஊர்க்குருவி.**

# ஆசிரியர் பற்றாக்குறை, இடமாற்றம் தொடர்பில் வடக்கு ஆளுநரிடம் சங்கங்கள் கோரிக்கைகள்!



யாழ்ப்பாணம், டிசெ. 16

வடக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறை, இடமாற்றங்கள் வழங்கப்படாமை, அதிபர் நியமனங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் மற்றும் வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸை தனித்தனியாக சந்தித்து கோரிக்கைகளை சமர்பித்தனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று இந்த சந்திப்புகள் நடைபெற்றன.

இது தொடர்பாக ஆளுநர் செயலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

புதிய அதிபர் நியமனத்தால், இதுவரை பதில் கடமை ஆற்றியவர்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். கடினமான காலப்பகுதியில் பாடசாலை சமூகத்தை கட்டியெழுப்ப பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர் எனவும் வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம் ஆளுநரிடம் தெரிவித்தனர்.

போட்டிப் பரீட்சை ஊடாக தெரிவு செய்யப்பட்ட அதிபர்களுக்கான நியமன கடிதங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த வாரம் அவர்கள் கடமைகளை பொறுப்பேற்கவுள்ளனர். இதனால் பல வருடங்களாக பதில் கடமை புரிந்த அதிபர்கள், உள ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர் என்று அவர்கள் கூறினர். இந்நிலையில் ஏனைய மாகாணங்களில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு தங்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் வட மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கத்தினர் கோரிக்கை முன்வைத்தனர்.

விடயங்களை கேட்டறிந்த வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கைகளை பரிசீலிப்பதாகவும் தேவை ஏற்படின் ஜனாதிபதியின் கவனத்துக்கும் விடயங்களை கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும், சில ஆசிரியர்களின் இடமாற்றங்களில் சிக்கல் காணப்படுவதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆளுநரிடம் தெரிவித்தனர். அத்துடன், பாடசாலைகளில் காணப்படும் அபாயகரமான கட்டடங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், மாணவர்களுக்கான போசாக்கு திட்டம், தொண்டர் ஆசிரியர் நியமனம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆளுநரால் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

பாடசாலைகளில் காணப்படும் அபாயகரமான கட்டடங்கள் தொடர்பில் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன என்றும், ஒரு சில கட்டடங்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது வடக்கு மாகாண கல்விச் செயலாளர் பற்றிக் நிரஞ்சன் தெரிவித்தார்.

மாகாணத்தில் உள்ள உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர்கள் தவிர, ஏனைய ஆசிரியர்களின் எண்ணிக்கை மேலதிகமாகவே காணப்படுவதாகவும் ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய, இடமாற்றக் கொள்கை அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் இடமாற்றத்தில் எவ்வித பாரபட்சமும் தேவையில்லை எனவும், இடமாற்றக் கொள்கை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் மாணவர்களுக்கான போசாக்கு திட்ட முன்மொழிவுகள் மத்திய கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அனுமதி கிடைத்தவுடன் அந்த திட்டங்கள் அமுல்படுத்தப்படும் எனவும் ஆளுநர் கூறினார். (ஐ)

# 4 வருடங்களில் வெளியேறிய 7 இலட்சத்து 32 ஆயிரம் பேர்!

கொழும்பு, டிசெ. 16

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக கடந்த நான்கு வருடங்களில் நாட்டில் இருந்து பெருந்தொகையானோர் வெளியேறிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

7 இலட்சத்து 32 ஆயிரம் பேர் இவ்வாறு இலங்கையிலிருந்து கடந்த நான்கு வருடங்களில் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

தகவலறியும் சட்டத்தின் கீழ் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் குருநாகல் கிளை பணியகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களுக்கு இணங்க, இது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கையிலேயே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்தகவல்களுக்கு இணங்க இலங்கையர்கள் வீட்டுப் பணிப்பெண்களாகவும் தொழிலாளர்களாகவும் மின்சார கைத்தொழில் துறை வேலை வாய்ப்புக்காகவும் சாரதி உள்ளிட்ட ஏனைய தொழில்களுக்காகவும் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் 15 பிரதேச அலுவலகங்கள் நாடளாவிய ரீதியில் காணப்படுகின்றன.

இந்த அலுவலகங்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொண்டே சட்ட ரீதியாக மேற்படி 07 இலட்சத்து 32 ஆயிரம் பேரும் வெளிநாடு சென்றுள்ளனர். (அ)

# 10 பொருள்கள் விலை குறைப்பு

கொழும்பு, டிசெ. 16

சதொச விற்பனை நிலையத்தினால் 10 அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இந்த விலை குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பால் மா 10 ரூபாவாலும், இறக்குமதி செய்யப்பட்ட ரின் மீன் (425 கிராம்) 55 ரூபாவாலும், 155 கிராம் இறக்குமதி செய்யப்பட்ட ரின்மீன் 10 ரூபாவினாலும், 425 கிராம் உள்நாட்டு ரின்மீன் 20 ரூபாவினாலும், உள்ளூர் உருளைக்கிழங்கு 15 ரூபாவினாலும், இறக்குமதி செய்யப்பட்ட உருளைக் கிழங்கு 15 ரூபாவினாலும், கொண்டைக்கடலை 5 ரூபாவினாலும் விலை ஒரு கிலோ சிவப்பு அரிசி 8 ரூபாவினாலும், வெள்ளை நாடு (உள்ளூர்) 7 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது. (அ)

## யாழ்.கச்சேரிக்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் 3½ பரப்புக் காணி, இரண்டு வெட்டுக் கிணறுகளுடன் உடன் விற்பனைக்குண்டு. இந்தக் காணி சுண்டுக்குழி தபால் நிலையத்துக்கு அருகில் - கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ளது. 55 மில்லியனுக்கு (5 கோடியே 50 லட்சம்) மேலான விலை எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்புகளுக்கு : +447963743585 (Whatapp),
0212227141(Sri Lanka)
E.mail : Jamesraj_uk@yahoo.co.uk

ஈழநாடு
Eelanadu
16.12.2023 சனிக்கிழமை
සීලනාඩු
சோபகிருது வருடம், கார்த்திகை 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியாவை அணுகுதல்

இந்து மாமன்றம் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியிருக்கின்றது. ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தலையீடு செய்யுமாறும் தமிழ், முஸ்லிம் கட்சிகளை அழைத்து பேசுமாறும் கோரியிருக்கின்றது. முஸ்லிம் கட்சிகளை எதற்காக அழைக்க வேண்டும் - மேலும் முஸ்லிம் கட்சிகள் இந்தியாவிடம் எப்போதாவது உதவியை கோரியிருக்கின்றனவா? இதற்கான பதிலை இந்து மாமன்றம்தான் வழங்க வேண்டும்.

ஆளுக்கொரு கடிதம் அனுப்பும் முயற்சிகள் பயனற்றவை. ஏற்கனவே, மக்கள் முறைப்பாட்டுக்கான வடக்கு - கிழக்கு சிவில் சமூகம் இந்திய பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றது. வடக்கு, கிழக்கின் முன்னணி புத்திஜீவிகள், மதத் தலைவர்கள், பல்கலைக் கழக துணை வேந்தர்கள் எனப் பலரும் - குறித்த கடிதத்தில் கையெழுத் திட்டிருக்கின்றனர். ஏற்கனவே, கட்சிகள் அனுப்பிய கடிதங்கள் மூலம் குழப்பங்கள் ஏற்படலாம் - என்னும் நிலையில்தான் குறித்த சிவில் சமூக முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தமிழ் கட்சிகளை புதுடில்லி அழைக்காமல் இருப்பதற்கு காரணங்கள் உண்டு. புதுடில்லிக்கு செல்வதற்கு முன்னர் - முதலில், தமிழ் கட்சிகள் தங்களுக்குள் தெளிவான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். புதுடில்லியின் எல்லைக் கோட்டை தெளிவாகப் புரிந்து கொண்டு அதற்கேற்ப தங்களின் கோரிக்கையை வடிவமைக்க வேண்டும். இந்திய பிரதமருக்கு தமிழ்த் தேசிய கட்சிகளின் சார்பில் இதுவரையில் மூன்று கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் எந்த அடிப்படையில் புதுடில்லி தமிழ் கட்சிகளை அழைக்க முடியும்?

யாரை அழைப்பது? மூன்று கடிதங்கள் அனுப்பிய அனைத்துக் கட்சிகளையுமா அல்லது முதலில் கடிதத்தில் கையெழுத்திட்ட ஆறு கட்சிகளையா? அனைவரையும் அழைத்து இந்தியா எதனைக் கூறமுடியும்? ஏற்கனவே, புதுடில்லியின் அழைப்பை சம்பந்தன் உதாசீனம் செய்திருக்கின்றார். தமிழ் கட்சிகளை அழைத்து பேசுங்கள் என்று கூற முயற்சிப்பவர்கள் இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியாவை அணுகுவதற்கு முன்னர் தமிழ் கட்சிகள் தங்களுக்குள் அதிகம் வீட்டு வேலைகளை செய்ய வேண்டும். ஒரு பிராந்திய சக்தி என்னும் வகையில் இந்தியாவுக்கு பல்வேறு பிரச்னைகள் உள்ளன. ஈழத் தமிழ் மக்கள்மீது இந்தியாவுக்கு கரிசனை உண்டு. அதனை பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தியா வெளிப்படுத்தியிருக்கின்றது. ஆனால், இந்தியாவுக்கு மட்டுப்பாடுகள் உண்டு. இலங்கை ஓர் உடனடி அயல்நாடு. ஓர் அயல்நாட்டுக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு சில வரையறைகள் உண்டு.

இதேவேளை, ஈழத் தமிழர்கள் சார்பில் இந்தியாவின் நேரடியான தலையீடானது இந்தியாவுக்கு மோசமான அனுபவங்களை கொடுத்திருந்தது. இப்போதும் 35 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் இந்தியாவின்மீது ஒருசில அரசியல் குழுக்கள் விமர்சனங்களை முன்வைக்கின்றன. இந்தியாவிடம் உதவிகளை கோரும்போது, இந்த வரலாறையும் நாம் மறந்துவிடக்கூடாது. அன்று இந்தியா வலிந்து உதவிகளை செய்வதற்குத் தயாராக இருந்தபோது தமிழர் தரப்பு அதனை முறையாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. இப்போது சுடுகிறது மடியை தாருங்கள் என்றால் - இந்தியா எதுவும் செய்ய முடியாது.

முதலில் இந்தியாவிடம் செல்வதற்கு முன்னர் தமிழ் கட்சிகள் முடிந்தவரையில் தங்களுக்குள் ஒன்றுபட வேண்டும். தங்களின் நிலைப்பாட்டில் குழப்பமற்ற நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். அண்மையில், இந்தியாவுக்கு சென்றிருந்த குழுவில் சென்றவர்கள் சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பிலும் பேசியிருக்கின்றனர். இந்த நிலையில் எந்த அடிப்படையில் பிரதமர் மோடி ஈழத் தமிழர்களை அணுகுவது?

# சட்ட மா அதிபரின் ஆலோசனை தாமதம் நிலாவரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

*நிலாவரையில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தடுத்ததன் மூலம் அரச கருமங்களுக்கு வலி. கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தடை ஏற்படுத்தினார் என தொடரப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைப்பதில் தாமதம் நிலவுவதால் 2024 ஜூன் 12 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.*

*நேற்று வெள்ளிக்கிழமை மல்லாகம் நீதிமன்றில் வழக்கு தவணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபரின் கிடைக்கப்பெறவில்லை என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். இதையடுத்து 2024 ஜூன் 12ஆம் திகதிக்கு வழக்கை நீதிபதி தவணையிட்டார்.*

*கடந்த 2021 ஆண்டின் ஆரம்பத்தில் தொல்லியல் திணைக்களமும் இராணுவத்தினரும் இணைந்து நிலாவரை கிணறு அமைந்துள்ள வளாகத்தில் பௌத்த விகாரை அமைப்பது போன்று சந்தேகத்துக்கு இடமான முறையில் அத்திபாரம் வெட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனை வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தடுத்திருந்தார்.*

*இதையடுத்து, தொல்லியல் திணைக்களத்தினர் வலி. கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பெருமளவானவர்களுடன் நிலாவரை பகுதிக்கு வருகை தந்து தமது அரச கருமத்துக்கு தொடர்ந்தும் தடை ஏற்படுத்திவருகின்றார் என அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.*

*இது தொடர்பில் நிரோஷுக்கு எதிராக தொல்பொருள் திணைக்களம் வழக்கு தொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

*(ஐ)*

# அன்ரன் பாலசிங்கம் நினைவுப் பேருரை!

*கிளிநொச்சி, டிசெ. 16*

*தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நினைவாக ‘வணங்குவோம் வல்லமை சேர்ப்போம்’ என்ற தலைப்பில் நினைவு பேருரையும் கருத்தாடலும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.*

*“தேசத்தின் குரல்“ அரசறிவியல்பள்ளி முன்னெடுக்கும் இந்த நிகழ்வு கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியில் அமைந்துள்ள ஆர். எஸ். கிறீன் பாரதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

*உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கை கிளையின் தலைவர் அ. சத்தியானந்தம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தொடக்கவுரையை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம் ஆற்றுவார். நினைவுப் பேருரையை “ஈழத் தமிழரின் இராஜதந்திரப் பயணத்தில் தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் வகிபாகம்“, என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை தலைவர் கே. ரி. கணேசலிங்கம் ஆற்றுவார்.*

*தொடர்ந்து, ‘ஈழத் தமிழரின் இராஜதந்திரப் பயணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகள் எதிர்கொள்ளும் சவால்களும் சாத்தியங்களும்’ என்ற தலைப்பில் மூத்த ஊடகவியலாளர் அ. நிக்சன், “ஈழத் தமிழரின் இராஜதந்திரப் பயணத்தில் புலம்பெயர் தேசக் கட்டுமானங்கள் புவிசார் அரசியல் நோக்கு“ என்ற தலைப்பில் எழுத்தாளர் குணா கவியழகன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். நிறைவில் சபையோரின் குறிப்புரைகள் இடம்பெறும்.*

*(ஐ)*

# ஆண்டிறுதி கச்சேரி

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

*கோண்டாவில் குட்டிச்சுட்டி முன்பள்ளியின் அகம் குழந்தைகள் பகல் நேர காப்பக மாணவர்களின் ஆண்டு இறுதி கச்சேரி - 2023 நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

*து. சுதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உடற்கூற்றியற்துறை தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி சிவநந்தினி உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.*

*சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி திணைக்கள பிரதி பணிப்பாளர் (அழகியல்) சி. சிவசிவா, ஓய்வுபெற்ற பிரதி அதிபர் கே. எஸ். சிவஞானராஜா, குமரன் விளையாட்டுக்கழகம் கனடா கிளை முன்னாள் தலைவர் சு. ஜெயதாசன், ஓய்வுபெற்ற அதிபர் சண். வாமதேவன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ)*

# கவிதை நூல் வெளியீடு!

*யாழ்ப்பாணம், டிசெ. 16*

*உரும்பையூர் து. திலக் (கிரி) எழுதிய ‘சிதறல்கள் 100’ கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் இந்து கல்லூரி நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.*

*முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய அதிபர் சி. நாகேந்திரராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுகவுரையை கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா கல்லூரி அதிபர் கலாநிதி சூரியகுமாரி இராசேந்திரம் ஆற்றுவார்.*

*வெளியீட்டுரையை கவிஞர் வெற்றி துஷ்யந்தன், சிறப்புரையை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபாலசுந்தரன் ஆகியோர் வழங்குவர்.*

*(ஐ)*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்தநாள்.

**இடபம்**

சந்திராஷ்டமம் தொடங்குவதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் தொழில் ரகசியங்களை சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம்.

**மிதுனம்**

உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**கடகம்**

குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். மகிழ்ச்சியான நாள்.

**சிம்மம்**

புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும் ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**துலாம்**

திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். முன்கோபம் குறையும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். மற்றவர்களின் குறைகளை கவனம் செலுத்த வேண்டாம்.

**மகரம்**

இன்றைய தினம் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்களிடம் விட்டுக்கொடுத்துப் போங்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கும்பம்**

புதிய கோணத்தில் பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்கள் கை ஓங்கும். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**மீனம்**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். புது வாய்ப்புகள் தேடி வரும். காரியம் கைகூடும் நாள்.

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம் திங்கட்கிழமை ஆரம்பமாகிறது

சென்னை, டிசெ. 16

**தமிழகத்தில் அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திட வழிவகுக்கும் “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் திங்கட்கிழமை கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கவுள்ளார் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இதன்மூலம் கடந்த இரண்டரை ஆண்டுகளில் சுமார் 49 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு, அவற்றுக்கு உரிய முறையில் தீர்வு காணப்பட்டு வருகிறது. அதோடு, தமிழக முதல்வர் நேரடியாக மாவட்டங்களுக்கு ஆய்வு பயணம் மேற்கொண்டு, “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற முன்னெடுப்பின் கீழ், மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, கள ஆய்வுகள் மேற்கொண்டு, அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சேவைகள் குறிப்பிட்ட காலத்துக்குள் பொது மக்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்திட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்.

தமிழக முதல்வரின் இந்த முன்னெடுப்பின் நீட்சியாக, அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் செம்மைப் படுத்தி, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல் கல்லாக “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டம் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினால் டிசெ.18 அன்று கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கப்படவுள்ளது.

“மக்களுடன் முதல்வர்“” என்ற இத்திட்டத்தில், பொது மக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டு கழகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் போன்ற அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெறுவதற்கு முதல்வரின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புற, மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வட்டார மற்றும் கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது - என்றுள்ளது.

# ஹிந்தி தேசிய மொழியல்ல; முதல்வர் ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, டிசெ.16

“பல்வேறு மொழி பேசும் மக்களின் கூட்டாட்சி நாடு இந்தியா. கூட்டாட்சித் தன்மையை வலியுறுத்தும் வகையில்தான் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் செயல்பட வேண்டும். ஹிந்தி அலுவல் மொழியே தவிர தேசிய மொழியல்ல என்று அவருக்கு யார் சொல்வது?” என்று கோவா விமான நிலையத்தில் தமிழ் பெண் ஒருவருக்கு ஏற்பட்ட நிகழ்வுக்கு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தனது சமூகவலை தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,



“கோவா விமான நிலையத்தில் தமிழ்ப் பெண் ஒருவரிடம் ஹிந்தியில் பேசி, அவர் ஹிந்தி தெரியாது என்று சொன்னதும் மத்திய தொழில் பாதுகாப்பு படையை சேர்ந்த ஒருவரால் மிரட்டப்பட்டுள்ளார். “தமிழ் நாடு இந்தியாவில்தானே இருக்கிறது” என்றும், “இந்தியாவில் உள்ள அனைவரும் ஹிந்தியை கற்றாக வேண்டும்” என்றும் பாடம் எடுத்துள்ளார். இது கடும் கண்டனத்துக்குரியது.

ஹிந்தி அலுவல் மொழியே தவிர தேசிய மொழியல்ல என்று அவருக்கு யார் சொல்வது? பல்வேறு மொழி பேசும் மக்களின் கூட்டாட்சி நாடு இந்தியா. கூட்டாட்சித் தன்மையை வலியுறுத்தும் வகையில்தான் மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் செயல்பட வேண்டும். விமான நிலையங்களில் அனைத்து மொழிகளுக்கும் உரிய மதிப்பும் மரியாதையும் வழங்கப்பட வேண்டும” என்று முதல்வர் பதிவிட்டுள்ளார்.

(ஐ)

# தி. மு. க. - பா. ஜ. கட்சிகளின் இரகசிய உறவு அம்பலம்!

சென்னை, டிசெ. 16

வெள்ள மீட்பு பணியில் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்பட்டுள்ளது என்று மத்திய நிபுணர் குழுவினர் பாராட்டியுள்ளனர். இதன்மூலம் தி.மு.க.-பாரதிய ஜனதா இடையே உள்ள இரகசிய உறவு அம்பலமாகி உள்ளது என்று அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் டி. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்

நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் கருத்து வெளியிடுகையில்,

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கடந்த 2015ஆம் ஆண்டு மழைவெள்ளம் வந்தபோது அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. ஆனால் தி.மு.க. அரசு மக்களை ஏமாற்றி உள்ளது. தேர்தல் வாக்குறுதியிலும் அறிவித்தது ஒன்று, செய்தது ஒன்று என ஏமாற்றினார்கள்.

மழை வெள்ள மீட்பு பணிகளை பார்வையிட வந்த மத்திய நிபுணர் குழுவினர் தமிழக அரசை பாராட்டியதாக செய்திகள் வந்துள்ளன. ஆனால், மத்திய நிபுணர் குழுவினரை பொலிஸார் மூலம் பொதுமக்களை சந்திக்க விடாமல் தி. மு. க. அரசு தடுத்துள்ளது. மக்களை சந்தித்தால்தான் உண்மையான நிலவரம் தெரிய வரும். ஆனால், மக்களை சந்திக்காமல் வெள்ள



மீட்பு பணியில் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்பட்டுள்ளது என்று மத்திய நிபுணர் குழுவினர் பாராட்டியுள்ளனர். இதன் மூலம் தி.மு.க.-பாரதிய ஜனதா இடையே உள்ள இரகசிய உறவு அம்பலமாகி உள்ளது - இவ்வாறு அவர் கூறினார்.

# பொருளாதார நெருக்கடி நிலைக்கு காரணமானோர் மீது நடவடிக்கை!

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வின்போது பொதுமக்கள் வலியுறுத்தல்

கொழும்பு, டிசெ. 16

**நாடு தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச்சுட்டி ஆய்வில் பெரும்பான்மையான பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக ஆட்சி தொடர்பான நம்பிக்கைச் சுட்டி ஆய்வு முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு அந்நிலையத்தின் கணக்கெடுப்பு ஆய்வுப் பிரிவான சமூகக் குறிகாட்டியினால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கூறப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமானது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குப் பங்களிப்புச்செய்யும் எனக் கூறக்கூடிய பொருளாதார மற்றும் கொள்கை மறுசீரமைப்புக்களைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துவருகின்றது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு பொதுமக்கள் பொறுப்புக்கூறவேண்டிய அவசியமில்லை என்றாலும், இந்நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகளின் விளைவுகளை அவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது' என்று அவ்வறிக்கையில் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வானது பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்தைப் பயன்படுத்தி நாடளாவிய ரீதியில் சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய நான்கு முக்கிய சமூகங்களைச் சேர்ந்த 1350 நபர்களை மாதிரியாகக்கொண்டு மேற்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வு முடிவுகளின்படி 94.1 சதவீதமானோர் அனைத்து அரசியல்வாதிகளும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுவதுடன் கணக்கில் வராத அவர்களது சொத்துக்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட வேண்டும் எனவும், 94.5 சதவீதமானோர் தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்படவேண்டும் எனவும், 94.8 சதவீதமானோர் ஜனாதிபதி உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் தமது சொத்து விபரங்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும், 95.2 சதவீதமானோர் பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் தற்போதைய அரசாங்கத்திடம் கோரிக்கைவிடுத்துள்ளனர். குறிப்பாக பெரும்பான்மையான இலங்கையர்கள் அரசியல் தலைமையின் பொறுப்புக்கூறலை மேம்படுத்தவேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

அதேவேளை நாட்டின் ஊழல் நிலைவரத்தைப் பொறுத்தமட்டில் 87.2 சதவீதமானோர் ஊழல் அதிகரித்திருப்பதாகவும், 8.1 சதவீதமானோர் பொருளாதார நெருக்கடிக்கு முன்பு இருந்ததைப்போன்றே தற்போதும் இருப்பதாகவும், 3 சதவீதமானோர் ஊழல் மோசடிகள் குறைவடைந்திருப்பதாகவும். 1.6 சதவீதமானோர் அதுபற்றித் தமக்குத் தெரியாது எனவும் பதிலளித்துள்ளனர். (அ)



# நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான வாழைகளை நாசமாக்கிய யானைகள்

முல்லைத்தீவு, டிசெ. 16

முல்லைத்தீவு, உடையார் கட்டு கமநல சேவை பிரிவிற்குட்பட்ட விசுவமடு தொட்டியடி மேற்கு பகுதியில் வாழைத் தோட்டத்துக்குள் புகுந்த 04 யானைகள் விலை மதிப்பான கப்பல் வாழை மரங்களை நாசம் செய்துள்ளன.

இரவு 07 மணியளவில் தோட்டத்துக்குள் புகுந்த 04 யானைகள் அதிகாலை 2.00 மணி வரை வாழை மரங்களைச் சேதப்படுத்தியுள்ளன எனவும், அரை ஏக்கர் வாழைத் திட்டத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட 480 பெறுமதி மிக்க வாழைக்குட்டிகள் வழங்கப்பட்டு அதில் 225 வாழைகளை பயன் பெறும் நேரத்தில் யானைகள் சேதப்படுத்தியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தில் 4 இலட்சம் ரூபாய் தமக்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் போன வருடமும் இதே போன்ற அழிவைச் சந்தித்துள்ளதாகவும் உரிமையாளர் கவலை தெரிவித்தார். (அ)

# குத்தி விட்டு ஓடியவரை சுட்டுப்பிடித்த பொலிஸ்

கொழும்பு, டிசெ. 16

இரவு மோட்டார் சைக்கிளில் ரோந்து சென்ற பொரளை பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரை கூரான ஆயுதத்தால் குத்தி விட்டு ஓடிய நபரை துப்பாக்கியால் சுட்டுக் கைது செய்துள்ளதாக பொரளை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் பொலிஸ் பாதுகாப்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அந்த நபரிடம் இருந்து ஒரு கூரான ஆயுதமும், அருகில் பாதுகாப்பு ஹெல்மெட்டும் கிடந்ததை பொலிஸார் கண்டுபிடித்தனர்.

சந்தேகநபர் அனுராதபுரம் விஜயபுர பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# புவனேகபாகு மன்னனின் அரசவையை உடைத்த முன்னாள் மேயருக்கு சிறை!

கொழும்பு, டிசெ. 16

புவனகபாகுவின் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் குருநாகல் அரண்மனையை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் குற்றத்தை ஒப்புக் கொண்ட குருநாகல் முன்னாள் மேயர் உட்பட ஐவருக்கு குருநாகல் மேல் நீதிமன்ற நீதிபதி லால் பண்டார 3 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக, பிரதிவாதிகளுக்கு ஒரு கோடியே முப்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நட்டஈடு மற்றும் அரண்மனைக்கு ஏற்பட்ட சேதத்துக்காக தலா இரண்டு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

நட்டஈடாக செலுத்துமாறு உத்தரவிடப்பட்ட ஒரு கோடியே முப்பத்தேழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை குருநாகல் முன்னாள் மேயர் துஷார சஞ்சீவ விதாரணவினால் செலுத்தப்பட்டதுடன் பிரதிவாதிகளுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையும் செலுத்தப்பட்டது.

இது இலங்கையின் தொன்மை வாய்ந்த இடம் என்பதை அறிந்து சேதப்படுத்துவதை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. இதனால் பிரதிவாதிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் கோரிக்கை விடுத்திருந்தார்.

குற்றத்தை ஒப்புக்கொண்டதற்காக, குருநாகல் முன்னாள் மேயர் துஷார சஞ்சீவ விதாரண, முன்னாள் மாநகர ஆணையாளர் பிரதீப் நிஷாந்த திலகரத்ன, முன்னாள் மாநகர பொறியியலாளர் சமிந்த பண்டார அத்தியட்சகர், முன்னாள் பணிப் பரிசோதகர் இலலுதீன் சுல்பிகர் மற்றும் கனரக இயந்திர சாரதியாக பணிபுரிந்த லக்ஸ்மன் பிரியந்த ஆகியோருக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் திகதி, குருநாகல் தம்புள்ள வீதியில் அமைந்துள்ள குருநாகல் மாநகர சபைக்கு சொந்தமானது என நம்பப்படும் குருநாகல் நகரின் மத்தியில் அமைந்துள்ள அரண்மனை மண்டபம் இடிக்கப்பட்டது. (அ)

# மாணவனை புறக்கணித்ததால் ரூ.10 இலட்சம் இழப்பீட்டை வழங்குமாறு அதிபருக்கு உத்தரவு!

கொழும்பு, டிசெ. 16

15 வயது மாணவனை அடித்தல், கையாடல் செய்தல், சித்திரவதை செய்தல் மற்றும் புறக்கணித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளை அதிபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, ரூ.1 மில்லியனை மாணவனுக்கு இழப்பீடாக வழங்குமாறு களுத்துறை மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் என்.அபேரத்ன பாடசாலை அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த தொகையை அதிபர் நேற்று முன் தினம் நீதிபதி முன்னிலையில் செலுத்தினார்.

இதுதவிர அரசு கட்டணமாக ரூ.1,500 செலுத்தவும் நீதிபதி உத்தரவிட்டார்.

இத்தொகையை வழங்காவிட்டால் 3 மாத கால சிறைத்தண்டனையும், இழப்பீடு வழங்கப்படாவிட்டால் 24 மாதம் கடுங்காவல் தண்டனையும் அனுபவிக்கவும் நீதிபதி உத்தரவிட்டார்.

தொடங்கொட நவோத்யா பாடசாலையின் முன்னாள் அதிபரான சரோஜினி நிர்மலா கொத்தலாவல என்பவருக்கே இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26 ஆம் திகதி அல்லது அதற்கு அடுத்த நாள் தொடக்கம் தொடங்கொடையில் மாணவர் ஒருவரை கொடுமைப்படுத்தியதாக சட்டமா அதிபர் அவருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

அந்த வருடம் பொசன் பண்டிகைக்காக தொடங்கொடை பொலிஸார் துடுகல சந்தியில் குத்துவிளக்கு போட்டி மற்றும் கண்காட்சியை நடத்தியதுடன், தொடங்கொடை நவோத்யா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இம்மாணவனால் போத்தலில் சுழலும் விளக்கு வழங்கப்பட்டது.

அவர் முதலிடம் பெற்றார்.

மேடையில் மாணவர் பணச் சரிபார்ப்பு மற்றும் சான்றிதழைப் பெற்ற பிறகு, பாடசாலை வழங்கிய வடிவமைப்பு என்று கூறி அவரிடமிருந்து முதல்வர் பரிசுகளைப் பெற்றார்.

அப்போது மாணவன் வெற்றி பெற்ற பரிசுகளை பெற அனுமதிக்கவில்லை என்று கூறி மாணவனை அவர் பகிரங்கமாக தாக்கியுள்ளார்.

விசாரணையில், மற்ற ஆசிரியர்களும் அலட்சியப்படுத்தியதால், மாணவ, மாணவியர் விரும்பியபடி தொழில்நுட்ப பாடம் படிக்க முடியாமல் போனது தெரியவந்தது.

இது அபராதம் மற்றும் சிறைத்தண்டனையுடன் கூடிய குற்றமாக இருந்தாலும், குற்றம் சாட்டப்பட்ட அதிபர் 2018 இல் களுத்துறை கல்வி வலயத்தில் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதியது.

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சராசரி பெறுபேறுகளை உயர்த்துவதற்கு அவர் பங்களித்தார். மேலும் அவரது 29 வருட சேவையின்போது அத்தகைய குற்றங்களைச் செய்யவில்லை.

இனிமேல் இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடமாட்டேன் என்ற உறுதிமொழியை கருத்தில் கொண்டு அவருக்கு மெலிதான தண்டனை வழங்கப்படும் என நீதிபதி குறிப்பிட்டார். (அ)

# ஆலயத்தில் திருடிய குற்றத்தில் கைதாகிய பூசகருக்கு மறியல்

யாழ்ப்பானம், டிசெ. 16

யாழ்ப்பாணத்தில் ஆலய விக்கிரங்களின் கீழிருந்த யந்திர தகடுகள் மற்றும் பொற்காசு என்பவற்றை திருடிய குற்றத்தில் கைது செய்யப்பட்ட ஆலய பூசகரை எதிர்வரும் 28ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

ஊர்காவற்துறை சுருவில் ஐயனார் கோவில் பூசகர் ஆலய மூல விக்கிரகமான ஐயனார் மற்றும் பரிவார மூர்த்தி விக்கிரகங்களின் கீழிருந்த யந்திர தகடுகள் மற்றும் பொற்காசுகள் என்பவற்றை திருடிய குற்றத்தில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர், சுமார் 17 இலட்ச ரூபாய் பெறுமதியான 10 பவுண் யந்திர தகடுகள் மற்றும், ஒரு இலட்ச ரூபாய் பெறுமதியான பொற்காசுகள் என்பவற்றை திருடிய குற்றச்சாட்டின் கீழ் நேற்று வியாழக்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போது பூசகரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க பதில் நீதவான் உத்தரவிட்டார். (அ)

# இலங்கைக்கு வருகிறது மற்றுமொரு சீன கப்பல்

## பிராந்தியத்துக்கு அச்சுறுத்தல் என்கின்றது இந்தியா

கொழும்பு, டிசெ. 16

**அடுத்த ஆண்டு ஜனவரியில் சீனாவின் மற்றுமொரு ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**



இதற்கான கோரிக்கையை சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் விடுத்துள்ளதாக இந்துஸ்தான் ரைம்ஸ் இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

சிங் யாங் ஹாங் 03 என பெயரிடப்பட்டுள்ள இந்த ஆய்வுக் கப்பல் ஜனவரி 5ஆம் திகதி முதல் மே மாதம் வரை இந்தியப் பெருங்கடலில் ஆய்வுப் பணியில் ஈடுபடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியில் இலங்கை மற்றும் மாலைதீவு துறைமுகங்களில் சீனக்கப்பல் நங்கூரமிடப்படும் என்றும் அதற்காக இலங்கை மற்றும் மாலைதீவு அரசாங்கத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த கப்பலுக்கு கடல் ஆய்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குவது பிராந்தியத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் என இந்திய அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளது.



# பிரதமர்-டென்மார்க் தூதுவர் இடையே கலந்துரையாடல்

கொழும்பு, டிசெ. 16

பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் டென்மார்க் தூதுவர் பிரெட்டி ஸ்வேன் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் டென்மார்க் இடையிலான இருதரப்பு உறவுகள் மாற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

டென்மார்க் இலத்திரனியல் உற்பத்தி தொழிற்சாலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், சர்வதேச நிதி வசதிகளின் முன்னேற்றம் குறித்து விளக்கிய பிரதமர், டென்மார்க் தூதுவர் வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

(அ)

# இரண்டு கோடி ரூபா பெறுமதியான கஜ முத்துக்களுடன் நால்வர் கைது!

கொழும்பு, டிசெ. 16

இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான 4 கஜ முத்துக்களுடன் 4 பேர் சீதுவையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கஜமுத்துக்களை விற்பனை செய்வதற்கு சென்ற சந்தர்ப்பத்திலே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் இமதுவ, வெலிஓயா, பளுகஸ்வெள மற்றும் பன்னிபிட்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டது.

இதன்போது, சந்தேகநபர்கள் பயணித்த பார வூர்தி ஒன்றையும் பொலிஸார் மீட்டனர்.

(அ)

# பால் பண்ணை பதிவு ஜனவரியில் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 16

நாட்டில் பால் பண்ணைகளை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அனைத்து பால் பண்ணைகளையும் பதிவு செய்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில், 90,592 கால்நடை பண்ணைகள் காணப்படுகின்ற போதிலும், 58,137 பண்ணைகள் மாத்திரமே கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் பெரும்பாலானவை நாளொன்றுக்கு 100 லீட்டருக்கும் குறைவான பால் பெரும் பண்ணைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நிலையில், பதிவு செய்யப்படாத பண்ணையாளர்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணங்களை பெறமுடியாத நிலை காணப்படுகிறது.

இந்த பின்னணியில், அடுத்த மாதத்தை கால்நடை பண்ணை பதிவு மாதமாக அறிவிப்பதற்கு விவசாய அமைச்சு தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

(அ)

# மூன்று நாட்டு தூதுவர்கள் யாழ்பாணத்துக்கு விஜயம்

## இராணுவ தளபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

சுவிட்சர்லாந்து, ஜப்பான் மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தனர்.

சுவிட்சர்லாந்தின் தூதுவர் சிறி வால்ட், ஜப்பான் தூதுவர் ஹிடேகி மிசுகோஷி மற்றும் தென்னாபிரிக்காவின் உயர்ஸ்தானிகர் சடைல் ஷால்க் ஆகியோர் பலாலியில் அமைந்துள்ள பாதுகாப்பு படைத் தலைமையகத்திற்கு சென்று யாழ். மாவட்ட பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ஆர்.கே ஹெட்டியாராச்சியுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.



இந்த சந்திப்பின் போது, இராணுவ ஒத்துழைப்பு, சமூக நலத்திட்டங்கள், அபிவிருத்தி உதவிகள் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக அறிய முடிந்தது.

(அ)

# ராகமையில் துப்பாக்கிப் பிரயோகம் 17 வயது சிறுவன் உட்பட மூவர் காயம்

கொழும்பு, டிசெ. 16

ராகமை - வல்பொல பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தில் 17 வயதுடைய சிறுவன் மற்றும் பெண்ணொருவர் உட்பட மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் றாகமை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிப் பிரயோகத்திற்கான காரணம் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

# சீன வெள்ளைக்குதிரை ஆலய வளாகத்தில் பாரம்பரிய பௌத்த விகாரை நிர்மாணம்

கொழும்பு, டிசெ. 16

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் பௌத்த தத்துவம் மற்றும் கலாசார பரிமாற்றத்திற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக புத்தசாசன சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

சீன தூதுக்குழுவினருடன் புத்தசாசன சமய கலாசார அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சீனாவில் உள்ள வெள்ளைக்குதிரை ஆலய வளாகத்தில் இலங்கையின் பாரம்ப



ரிய பௌத்த விகாரையை நிர்மாணிப்பது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இரு நாடுகளுக்குமிடையில் தொல்பொருள் பரிமாற்றத் திட்டங்கள், சுற்றுலா மற்றும் வர்த்தக மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சீன தூதுக்குழுவினருடன் கலந்துரையாடியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# சீன கல்வி நிறுவனத்துடன் முதலீட்டு சபை ஒப்பந்தம்!

கொழும்பு, டிசெ. 16

பசுமை திட்டமிடல் வலயங்களை உருவாக்குவதற்கு சீன கல்வி நிறுவனத்துக்கும் இலங்கை முதலீட்டு சபைக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து முதலீட்டு வலயங்களும் பசுமை முதலீட்டு வலயங்களாக மாற்றப்படும் சாத்தியம் காணப்படுவதாக இலங்கை முதலீட்டு சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், அடுத்த வருட இறுதிக்குள், சீன கல்வி நிறுவனத்தின் மூலம் மூன்று முதலீட்டு வலயங்கள் சுற்றாடல் பாதுகாப்பு பசுமை திட்டமிடல் வலயங்களாக மாற்றப்படும் எனவும் அந்த சபை குறிப்பிட்டுள்ளது.

(அ)

# பொது வேட்பாளராக போட்டியிட என்னை அழைத்தால் ஆராய்வேன்

## ரொஷான் ரணசிங்க அறிவிப்பு



கொழும்பு, டிசெ. 16

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிடுமாறு யாராவது தன்னை அழைத்தால், அது குறித்து ஆராய்ந்து பார்க்க போவதாக முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.**

தென்னிலங்கையின் பிரதான சங்க நாயக்கர், கலாநிதி ஓமல்பே சோபித தேரரை எம்பிலிப்பிட்டிய ஸ்ரீ போதிராஜ விகாரைக்கு சென்று சந்தித்த பின்னர், செய்தியாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

தொடர்ந்தும் சுயாதீனமாகச் செயற்படுவேன்.எவராவது சிறந்த யோசனையை முன்வைத்தால், எதிர்கால அரசியலுக்காக அது குறித்து ஆராய்ந்து பார்ப்பேன். பாராளுமன்ற உறுப்பினராக மக்கள் சார்பில் ஊழலுக்கு எதிராக தொடர்ந்தும் செயற்படுவேன் எனவும் ரொஷான் ரணசிங்க குறிப்பிட்டார்.

அதேவேளை, இந்த நாடு அழிவைச் சந்திக்க காரணமான மொட்டுக் கட்சியுடன் இணைந்து கடந்த காலத்தில் பணியாற்றிய முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்கவும் பொறுப்புக் கூறவேண்டும் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் அவர் அதில் இருந்து மீண்டு வெளியில் வந்திருப்பது சிறந்த விடயம். ரொஷான் ரணசிங்க, எதிர்காலத்தில் கொள்கை ரீதியான அரசியல் செயற்பாடுகளுடன் கூடிய பயணத்தை மேற்கொள்ள வேண்டும் எனவும் சோபித தேரர் கூறினார்.

(அ)



# கட்டுநாயக்கவில் பதற்றம்!

கொழும்பு, டிசெ. 16

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று மதியம் பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய ஊழியர்கள் தமது சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி, நேற்றைய மதிய உணவு நேரத்தில் விமான நிலைய வருகை முனையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இதன்போது விமான நிலைய கூட்டுத் தொழிற்சங்கத்தின் தலைவர் தம்மிக்க பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கையில்-

எங்கள் சமூகம் எந்த ஒரு தாய் நிறுவனத்திற்கும் சொந்தமானது அல்ல. எங்களுக்கான சம்பள உயர்வை பெற்றுத் தர வேண்டும் என்பதே இன்று இந்தப் பிரச்சாரத்தின் முக்கிய கோரிக்கையாக உள்ளது. விமான நிலைய ஊழியர்களுக்கு 06 வருடங்களாக சம்பள உயர்வு கிடைக்கவில்லை -என்றார்.

எனவே, எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் சம்பள உயர்வு குறித்து எழுத்துப்பூர்வமாக அறிவிக்க வேண்டும். அதிகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் தொகையை அங்கு குறிப்பிடவேண்டும்.

இதனை நிறைவேற்றாவிட்டால் 2024 ஜனவரி 03 ஆம் திகதி முதல் பாரிய தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராக உள்ளோம்" என்றும் அவர் கூறினார்.

(அ)

# வவுனியா பிரதேச செயலக கலாசார விழாவில் துறை சார்ந்த 9 பேருக்கு கலாநேத்ரா விருதுகள்





வவுனியா, டிசெ. 16

வவுனியா பிரதேச செயலக கலாசார விழாவில் துறை சார்ந்த ஒன்பது பேருக்கு கலாநேத்ரா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வவவுனியா பிரதேச செயலகமும், வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், வவுனியா பிரதேச கலாசார பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த வவுனியா பிரதேச கலாசார பெருவிழா நேற்று முன்தினம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வவுனியா பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிய துறை சார்ந்த ஒன்பது பேருக்கு கலாநேத்ரா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அந்தவகையில், வவுனியா பிரதேசத்தில் கலைத்துறையில் கவிதை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிவரும் கலாபூசணம் நாகலிங்கம் தியாகராஜாவுக்கு கவிதைத் துறைக்கான கலாநேத்ரா விருதும், கலாபூசணம் செந்தில்மதி பரமசிவராஜாவுக்கு வாத்திய இசைக்கான கலாநேத்ரா விருதும், சிதம்பரப்பிள்ளை வரதராஜனுக்கு இயலுக்கான கலாநேத்ரா விருதும், கந்தையா ஸ்ரீ கந்தவேளுக்கு நாடக எழுத்துருக்கான கலாநேத்ரா விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்தோடு வவுனியா பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிவரும் பண்டிதர் வீரசிங்கம் பிரதீபனுக்கு கட்டுரைக்கான கலாநேத்ரா விருதும், சோமரட்ணம் ஜெயச்சந்திரனுக்கு மெல்லிசைக்கான கலாநேத்ரா விருதும், விஷ்ணுராஜ் விஜயகுமாருக்கு நாடக இலக்கியத்துக்கான கலாநேத்ரா விருதும், சர்மினி டனிஸ்கரனுக்கு நடனத்துக்கான கலாநேத்ரா விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அத்தோடு வவுனியா பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை நல்கிவரும் பாலநாதன் சதீசனுக்கு ஊடகத்துறைக்கான கலாநேத்ரா விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக உத்தியோகத்தர் கலாபூசணம் கந்தையா ஐயம்பிள்ளை, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் பிரதிப்பணிப்பாளர் லாகினி நிருபராஜ், வவுனியா பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், கலாசார பேரவை குழுவினரால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதோடு நினைவுக்கேடயம், சான்றிதழ் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(அ)

# நீர்வழங்கல் துறையில் 2024இல் மறுசீரமைப்பு!

கொழும்பு, டிசெ. 16

"நீர் உற்பத்தி - விநியோக நடவடிக்கைக்கு தற்போது மின்சாரமே அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அடுத்தவருடம் இந்த முறைமையில் நிச்சயம் மாற்றம் வரும். மின்பயன்பாடு மட்டுப்படுத்தப்பட்டு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்கள் பயன்படுத்தப்படும்." - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச நீர் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையானது சர்வதேச நீர் மாநாடு நிகழ்வை நேற்று முன் தினம் "நீர் மற்றும் சுகாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான மாற்றத்தை துரிதப்படுத்துதல்" எனும் தொனிப்பொருளின் கீழ் இரத்மலானையில் அமைந்துள்ள நீர் மற்றும் சுகாதாரத்திற்கான மேம்பாட்டு மையம் எனப்படும் மண்டபத்தில் நடைபெற்றது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, உலக வங்கியின் உலக நாடுகளுக்கான பணிப்பாளர் சரோஜ் குமார் ஜா, அமைச்சின் செயலாளர் எஸ். சமரதிவாகர, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க, பொது முகாமையாளர் ருவான் லியனகே, வெளிநாட்டு பிரதிநிதிகள், உலக வங்கியின் அதிகாரிகள், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் என அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் உட்பட பல முக்கியஸ்தர்களும் கலந்துக் கொண்டனர்.

இதன்போது அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு,

" கடந்த ஜனவரி மாதம் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டதால் எமக்கு மேலதிக செலவீனங்களையும் ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் கடந்த ஆகஸ்ட் மாதம் நீர் கட்டணம் மறுசீரமைக்கப்பட்டது. எதிர்வரும் ஜனவரி முதல் நீர் கட்டணம் தொடர்பிலும் சூத்திரமொன்று அறிமுகப்படுத்தப்படும். வைத்தியசாலை, பாடசாலை, வணக்கஸ்தலங்களுக்கு சலுகைகளை வழங்குவது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தொழில் நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள்மீதும் சுமையை திணிப்பதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை. இருந்தும் நிறுவனத்தை கொண்டுநடத்தக் கூடிய வகையில் சாதாரண விலை சூத்திரமொன்று அறிமுகப்படுத்தப்படும்.

செலவீனங்களை மட்டுப்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்படுகின்றது. ஆளணி பலம் மறுசீரமைப்பு, டிஜிட்டல் மயமாக்கல், புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாடு, நீர் வீண்விரயத்தை தடுத்தல், தனியார் துறையையும் இணைத்துக்கொள்ளல் போன்றன இவற்றில் பிரதானமானவை.

புதுப்பிக்கத்தக்க சக்தி பயன்பாட்டுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏப்ரலில் நடவடிக்கை ஆரம்பமாகும். அத்துடன், சூரிய சக்தி பயன்பாட்டையும் 50 வீதம்வரை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அனைத்து மக்களுக்கும் சுத்தமான - பாதுகாப்பான குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்கு பொருளாதார நெருக்கடியும் தடையாக உள்ளது. எனவே, நிதி திரட்டுவதற்கான மாற்று வழிகள் பற்றியும் ஆராயப்படுகின்றது." - என்றார்.

(அ)

# வற் வரி அதிகரிப்பால் பொருட்களின் விலைகள் 60 வீதம் வரை உயரலாம்!

## ஐக்கிய வர்த்தக மன்றம் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 16

அரசாங்கம் வற் வரியை 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரிப்பதன் ஊடாக நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பொருளின் விலையும் 50 முதல் 60 வீதம் வரை அதிகரிக்கும் என இலங்கை ஐக்கிய வர்த்தக மன்றம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் கருத்து வெளியிட்ட இலங்கை ஐக்கிய வர்த்தக மன்றத்தின் தலைவர் டானியா அபேசுந்தர மேலும் கூறியதாவது,

"அரசாங்கம் வணிகர்களிடம் வரியை வசூலிக்க முறையான திட்டங்களை வகுக்க வேண்டும். வணிகர்களை ஊக்குவிப்பதன் ஊடாகவே நிலையான வரி வருமானத்தை வசூலிப்பதற்கான முறைமைகளை உருவாக்க முடியும்.

கடுமையான நெருக்கடி நேரத்தில் அரசாங்கம் வணிகர்களுக்கு வரி விதிக்க முயற்சித்தால், அவர்கள் எவ்வாறு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவை வழங்க முடியும்.

வற் வரி அதிகரிப்பால் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நுகர்வோருக்கு போட்டி விலையில் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது." என்றார்.

(அ)

# வடக்கு-கிழக்கு தமிழரின் இணைப்பாட்சி; மட்டக்களப்பில் விழிப்புணர்வு கண்காட்சி

மட்டக்களப்பு, டிசெ. 16

**வடக்கு கிழக்குத் தமிழரின் இணைப்பாட்சிக் கோரிக்கையின் தோற்றம் எனும் கருப்பொருளில் மட்டக்களப்பில் விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று இடம்பெற்றது.**

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் கிழக்கு மாகாண அங்கத்துவ அமைப்புக்கள் இணைந்து இந் நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன.

தன்னாமுனை பொது விளையாட்டு மைதானத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதை தொடர்ந்து தமிழர்களுக்கான சமஸ்டி அதிகாரத்தை வலியுறுத்தும் வகையிலான ஊர்வலம் நடைபெற்றது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் அழிக்கப்படும் வரலாறுகள் தொடர்பான ஆவணத் தொகுப்பும் வெளியிடப்பட்டது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு எனும் தலைப்பில் மக்கள் பிரகடனமும் வெளியிடப்பட்டது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உறவுகளின் சங்க பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

# வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு கல்குடாவில் கற்றல் உபகரணங்கள்

மட்டக்களப்பு, டிசெ. 16

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு, சைவக் குருமார் ஒன்றியத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சைவக் குருமார் ஒன்றிய தலைவர் சிவஸ்ரீ கா.கிருஷ்ணப்பிள்ளை தலைமையில் சந்திவெளியிலுள்ள கலாச்சார மண்டபத்தில் வைத்து கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

அத்துடன் சைவக் குருமார்களுக்கான ஒழுக்கத்தை பேணும் பொருட்டும்,சங்கத்தினை வளர்ச்சி பாதையில் முன்னெடுக்கும் முகமாக சத்தியப் பிரமாண நிகழ்வும் இடம்பெற்றது.

அதிதிகளாக சிவஸ்ரீ எம். சண்முகம் குருக்கள், கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு,கல்குடா கல்வி வலய பிரதி கல்விப்பணிப்பாளர் கே.ஜெயவதனன்,கலாசார உத்தியோகத்தர்.ப.சிவராம் மற்றும் பிரதேச பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர். (அ)

# கல்முனை வலயத்தில் கார்மேல் பற்றிமா மாணவர்கள் முதலிடம் பெற்று சாதனை!



அம்பாறை, டிசெ. 16

கல்முனை வலயக்கல்விப் பணிமனை நடத்திய செயற்பட்டு மகிழ்வோம் தரம் 05 வலய மட்ட போட்டியில் முதலாம் இடத்தை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி அணி பெற்றுக் கொண்டது.

இவ் வலயமட்ட போட்டி பாண்டிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

செல்வன் பி.ஹேசித் உள்ளிட்ட குழுவினர் இவ்வாறு முதலிடம் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி மாணவர்கள் கல்லூரி அதிபர் அருட் சகோதரர் சு.இ. றெஜினோல்ட் வழிகாட்டலில், பிரதி அதிபர் அருட்சகோதரி எம். பிரியசாந்தியின் நெறிப்படுத்தலில் இப் போட்டியை எதிர்கொண்டனர். (அ)

# சாய்ந்தமருது அல்-ஜலாலில் சுனாமி ஒத்திகை நிகழ்வு!

அம்பாறை, டிசெ. 16

அம்பாறை மாவட்ட செயலகமும், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையமும், சாய்ந்தமருது பிரதேச செயலகத்துடன் இணைந்து நடத்திய சுனாமி ஒத்திகை பயிற்சி நிகழ்வு நேற்று முன் தினம் சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன் போது சுனாமி ஒன்று ஏற்படும் என்ற உறுதி செய்யப்பட்ட தகவல் கிடைத்தால் மாணவர்களும், பாடசாலை ஆளணியினரும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற பயிற்சி அளிக்கப்பட்டது. அவற்றில் சுனாமி தொடர்பான அறிவித்தல் கிடைக்கும் போது அவசர ஒன்றுகூடல் இடத்தில் ஒன்றுகூடவும் அங்கிருந்து பாதுகாப்பான இடத்துக்கு மாணவர்களை கொண்டு சேர்ப்பதும் என்றவாறான செயற்பாடு இடம்பெற்றது. இதில் மாணவர்கள் பாடசாலையில் இருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு சாய்ந்தமருது ஜும்ஆப் பெரியபள்ளிவாசலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.



சாய்ந்தமருது பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவாபிக்கா மற்றும் அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நியாஸ் அவர்களினது மேற்பார்வையில் நடைபெற்ற இச்செயற்பாட்டில் அனர்த்த முகாமைத்துவ மாவட்ட உத்தியோகத்தர் ஏ.எல்.எம். அல்தாப் மற்றும் பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவத்திற்கான உத்தியோகத்தர்கள் ஆகியோர் மாணவர்களுக்கான வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

இச்செயற்பாட்டில் பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். சைபுதீன், பிரதி அதிபர் ம.கே. எம். சிராஜ் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்துவத்திற்கு பொறுப்பான ஆசிரியர்களான யூ.கே. முபாறக் மற்றும் ஏ.எம். எம். ஸாஹிர் ஆகியோர் பாடசாலை சார்பான திட்டமிடல்களை மேற்கொண்டிருந்தனர். மேலும் இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், மாணவர்கள், இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் பொலிஸாரும் கலந்து கொண்டனர். (அ)

# மட்டக்களப்பு அரச அதிபராக திருமதி முரளிதரன் நியமனம்!

மட்டக்களப்பு, டிசெ. 16

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான புதிய அரசாங்க அதிபராக திருமதி.முரளிதரன் நேற்று முன் தினம் நியமனம் பெற்றுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை தரத்தின் விசேட தரத்தையுடைய ஒரு சிரேஷ்ட நிர்வாக அதிகாரியான இவர் கிழக்கு மாகாண சபையில் பல்வேறு நிர்வாகப் பதவிகளை வகித்திருந்ததோடு இறுதியாக கிழக்கு மாகாண சுகாதார சுதேச அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றினார்.

குறித்த நியமனம் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவ.சந்திரகாந்தன் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கே.டி. என். ரஞ்சித் அசோக ஆகியோர் முன்னிலையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் வழங்கப்பட்டது. (அ)



# விசேட தேவையுடைய இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு கொடுப்பது குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு, டிசெ. 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் விசேட தேவையுடைய இளைஞர் யுவதிகளை தொழிலில் ஈடுபடுத்தல் தொடர்பான செயற்றிட்டம் உதவி மாவட்ட செயலாளர் ஆ. நவேஸ்வரன் தலைமையில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சந்திரகலா புவனேஸ்வரன் ஒழுங்கமைப்பில் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

சமூக சேவை திணைக்களமும், ஜெய்க்கா செயற்திட்டமும் இணைந்து நடாத்தும் இத்திட்டத்தில் இந்த வருடம் நடந்து முடிந்த நிகழ்வுகளில் மாவட்டத்தில் 14 பிரதேச செயலக பிரிவுகளில் நான்கு பிரிவுகளில் மாத்திரம் ஆறு விசேட தேவையுடைய இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு



வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் 2024 ஆம் ஆண்டுகளில் 25 வீதமான இம் மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்னும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (அ)

# பெற்றோலை கைவிடுவதற்கு உலக மாநாட்டில் இணக்கம்!

## 200 நாடுகள் இணைந்து தீர்மானம்

டுபாய், டிசெ. 16

**கடந்த நூற்றாண்டுகளில் உலகளாவிய அரசியலிலும் போர்களிலும் பொருளாதாரத்திலும் ஆக்கங்களிலும் அழிவுகளிலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்தி வந்த-வருகின்ற - பெற்றோலிய எரிபொருள்களின் பாவனைக்கு முடிவு கட்ட உலக நாடுகள் இணக்கம் எட்டியுள்ளன.**




உலகை பேரழிவின் விளிம்பில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்ற கனிம எரிபொருள்களின் பாவனையை கைவிடுவதை நோக்கிய "மாற்றத்தைத் தொடங்குவது" (transition" towards the abandonment of fossil fuels) என்று டுபாயில் நடை பெற்று முடிந்த உலக பருவ நிலை மாநாட்டின் (COP 28) இறுதி அறிக்கைப் பிரகடனத் தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகர் டுபாயில் நடைபெற்றுவந்த ஐ. நா. பருவநிலை மாநாட்டின் முடிவில் புதன்கிழமை இறுதிப் பிரகடனத்தை வெளியிட்ட கோப் - 28இன் தலைவர் சுல்தான் அல்-ஜாபர், "நாம் எல்லோரும் ஒன்றாகக் கூடி உலகத்தைச் சரியான திசைக்குத் திருப்பியிருக்கிறோம்" என்று பலத்த கரகோஷத்தின் மத்தியில் அறிவித்தார்.

உலகில் இவ்வாறு கனிம எரிபொருள்கள் அல்லது புதைபடிவ எரிபொருள்களாகிய பெற்றோலிய எண்ணெய்யை கைவிடுவதற்கான இணக்கம் ஒன்று நாடுகளிடையே எட்டப்படுவது வரலாற்றில் இதுவே முதல் முறையாகும். சுமார் 200 நாடுகளிடையே முன்னொருபோதும் நிகழ்ந்திராத இந்த இணக்கம் சுமார் இரண்டு வார கால விவாதங்களுக்குப் பிறகு எட்டப்பட்டிருக்கிறது.

இயற்கை பேரனர்த்தங்களால் இழப்புகளையும் சேதங்களையும் சந்திக்கின்ற வறிய நாடுகளுக்கு உதவுவதற்கான உலக நிதியம் 2050ஆம் ஆண்டில் உலக அணு சக்தியை மூன்று மடங்காக அதிகரித்தல் ஆகிய தீர்மானங்களும் மாநாட்டில் எட்டப்பட்டிருக்கின்றன. (ஐ)

# மக்கள் உயிர்களை காப்பாற்றுவதில் இஸ்ரேல் கவனம் செலுத்தவேண்டும்!

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்



வாஷிங்டன், டிசெ. 16

காஸாவில் பொதுமக்களின் உயிர்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது குறித்து இஸ்ரேல் கவனம் செலுத்தவேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் அமெரிக்க ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

இந்த வருட இறுதியுடன் இஸ்ரேல் ஹமாஸூக் எதிரான தனது நடவடிக்கைகளை குறைத்துக்கொள்ளவேண்டும் என கருதுகின்றீர்களா என்ற கேள்விக்கு, பொதுமக்களை எவ்வாறு காப்பாற்றுவது என்பது குறித்து இஸ்ரேல் கவனம் செலுத்தவேண்டும் என நான் விரும்புகின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

ஹமாஸூக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும் என தெரிவிக்கவில்லை கவனமாக இருக்கவேண்டும் என பைடன்தெரிவித்துள்ளார்.

இதேவேளை காஸாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களின் தீவிரதன்மையை குறைக்கவேண்டும் என வலியுறுத்தும் நோக்கத்துடன் வெள்ளை மாளிகை தனது முக்கிய அதிகாரி ஒருவரை இஸ்ரேலுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக்சுலிவனே இஸ்ரேல் சென்றுள்ளார் - சுலிவன் இஸ்ரேலிய பிரதமர் உட்பட முக்கிய அதிகாரிகளை சந்தித்துள்ளார்.

பெஞ்சமின் நெதன்யாகும் ஜக்சுலிவனும் மிகவும்தீவிரமான தாக்குதல்களை குறைத்து ஹமாசினை துல்லியமாக இலக்குவைக்கும் தாக்குதல்கள் குறித்து பேச்சு நடத்தினர் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. (ஐ)

# பாரஊர்தி ஏற்படுத்திய விபத்தில் 16 பேர் பலி; பலர் கவலைக்கிடம்!



கராகஸ், டிசெ. 16

சாரதியின் கட்டுப்பாட்டை மீறிய பாரஊர்தி வாகனங்களை மோதிய விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

வெனிசுலாவின் தலைநகர் கராகஸை இணைக்கும் கிரான் மாரிஸ்கர்டி அயாசுசோ நெடுஞ்சாலையில் அதிவேகமாக சென்றுகொண்டிருந்த பாரஊர்தி சாரதியின் கட்டுப் பாட்டை இழந்து மற்ற வாகனங்கள் மீது அடுத்தடுத்து மோதி விபத் துக்குள்ளானது.

இந்த பார ஊர்தி சுமார் 17 வாகனங்கள் மீது மோதியதில் அவை பலத்த சேதமடைந்து, தீப்பிடித்து எரிந்தன. அத்துடன், பஸ் ஒன்று முற்றாக சேதமடைந்தது.

இந்த கோர விபத்தில் 16 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# யூத நிறுவனங்களை தாக்க முயற்சி; ஐரோப்பாவில் ஹமாஸ்கள் கைது!

பெர்லின், டிசெ. 16

ஐரோப்பாவில் உள்ள யூத நிறுவனங்கள்மீது தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டியதாக டென்மார்க், ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீதுஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து, இஸ்ரேல் காஸா மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், ஐரோப்பாவில் உள்ள யூத நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டினர் என்ற சந்தேகத்தின் பேரில் டென்மார்க், ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளில் ஹமாஸ் உறுப்பினர்கள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் மூன்று பேர் ஜேர்மனி தலைநகர் பெர்லினிலும் மற்றொருவர் நெதர்லாந்திலும், மூவர் டென்மார்க்கிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மூன்று கைது நிகழ்வுகளுக்கும் இடையே ஏதேனும் தொடர்புகள் உள்ளனவா என்று விசாரணை நடைபெற்று வருகிறது. ஜேர்மனி மற்றும் நெதர்லாந்தில் கைது செய்யப்பட்ட நால்வருக்கும் ஹமாஸ் இயக்கத்துடன் நேரடி தொடர்பு இருப்பதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

டென்மார்க்கில் கைது செய்யப்பட்ட மூவரும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# இந்து மதமும் கிறிஸ்தவமும் ஒரே மாதிரி மதிப்பீடுடையவை!

## அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் விவேக்

வாஷிங்டன், டிசெ. 16

'ஓர் இந்து எப்படி அமெரிக்க ஜனாதிபதியாக இருக்க முடியும்?' என்ற கேள்விக்கு விவேக் ராமசாமி அளித்த பதில் பிரபலமாகியுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், எதிர்க்கட்சியான குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தேர்வு தீவிரமடைந்து வருகிறது. குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு போட்டியிடுபவர்களில் ஒருவரான இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் ராமசாமி, அமெரிக்க தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பலரின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

அப்போது, ''அமெரிக்காவை நிறுவியவர்களின் மதம் வேறு. உங்கள் மதம் வேறு. எனவே, நீங்கள் அமெரிக்க ஜனாதிபதியாக இருக்க முடியாது' என்று கூறுபவர்களுக்கு உங்கள் பதில் என்ன?" என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதில் அளித்த விவேக் ராமசாமி,

''நான் ஓர் இந்து. நான் என் அடையாளத்தைப் போலியாக காட்ட மாட்டேன். இந்து மதமும் கிறிஸ்தவமும் ஒரேமாதிரியான மதிப்பீடுகளை கொண்டிருக்கின்றன. எனது மத நம்பிக்கையின் அடிப்படையில், ஒவ்வொரு நபரும் ஒரு காரணத்துக்காக இங்கே இருக்கிறார்கள் என்பதும், அந்த காரணத்தை நிறைவேற்றுவது நமது தார்மீக கடமை. ஏனெனில், கடவுள் நம் ஒவ்வொருவருக்குள்ளும் வாழ்கிறார். நம் மூலம் பல்வேறு வழிகளில் அவர் செயல்படுகிறார். எனவே, நாம் அனைவரும் சமம்.



எனது வளர்ப்பு மிகவும் வழக்கமானது. திருமணங்கள் புனிதமானவை என்றும் குடும்பங்கள் சமுதாயத்தின் அடித்தளம் என்றும் எனது பெற்றோர்கள் எனக்கு கற்றுத் தந்திருக்கிறார்கள். திருமணத்துக்கு முன்பாக மதுப்பழக்கத்தை விட்டு விடுவது சாத்தியமானது. தகாத உறவு தவறானது. வாழ்வின் இன்பங்களை அனுபவிக்க சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த மதிப்பீடுகள் மிகவும் முக்கியம் அல்லவா?

அமெரிக்காவின் மூலமாக கிறிஸ்தவத்தைப் பரப்ப நான் சிறந்த ஜனாதிபதியாக இருப்பேனா என்று கேட்டால், நிச்சயம் இருக்க மாட்டேன். அதற்கு நான் சரியான தெரிவு அல்ல. ஆனால், அமெரிக்கா நிறுவியுள்ள மதிப்பீடுகளை பேணிக் காக்க நான் உறுதியாக நிற்பேன்'' என்று தெரிவித்துள்ளார்.

38 வயதாகும் விவேக் ராமசாமி, தென்மேற்கு ஓஹியோவைச் சேர்ந்தவர். இவரது தந்தையும், தாயும் கேரளாவில் இருந்து அமெரிக்கா சென்று குடியேறியவர்கள் என்பதும், விவேக் ராமசாமி தனக்கு தமிழ் தெரியும் என்று கூறியிருக்கிறார். (ஐ)

# வடமாகாண பாடசாலைகளில் பிளாஸ்ரிக் பொருட்கள் தடை!

## ஆளுநர் சார்ள்ஸ் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 16

**"பாடசாலைகளுக்குள் மாணவர்கள் பிளாஸ்ரிக் பொருட்களைக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கவேண்டும்" என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.**




வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மீளாய்வுக் கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தினமும் காலை கூட்டத்தின் போது டெங்கு ஒழிப்பு தொடர்பில் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டவேண்டும்.

அத்துடன், மாகாணத்திலுள்ள அனைத்து அரச திணைக்களங்களிலும் வாராந்தம் துப்பரவு பணிகளை மேற்கொள்ள திணைக்களத் தலைவர்கள் அறிவுறுத்தல் வழங்கவேண்டும்.

அத்துடன் வடக்கு மாகாணத்திற்குள் காணப்படும் தனியார் வைத்தியசாலைகளில் கடமைபுரியும் அரச வைத்தியர்களும், டெங்கு காய்ச்சல் தொடர்பில் சமூக அக்கறையுடன் செயற்படவேண்டும்-என்றார். (அ)

# உர மானிய திட்ட விவகாரம் ஏழு நிறுவனங்களுக்கு சிக்கல்

கொழும்பு, டிசெ. 16

உர மானியத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட உரங்களை விவசாயிகளுக்கு வழங்காமல் பல்வேறு நிறுவனங்களுக்கு வழங்கியதாக 7 நிறுவனங்களின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த 7 நிறுவனங்களும் கடந்த 2018 ஆம் ஆண்டு முதல், பல்வேறு நிறுவனங்களுக்கு அதிக விலைக்கு உரங்களை விற்பனை செய்து அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

விவசாய அமைச்சின் முன்னாள் செயலாளர்கள் இருவரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே இந்த மோசடி சம்பவம் அம்பலமாகியுள்ளது.

இந்நிலையில் குறித்த விவகாரம் தொடர்பான வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் முன்வைத்த உண்மைகளை பரிசீலித்த நீதவான், குறித்த 7 நிறுவனங்களின் வங்கிப் பதிவேடுகளை வரவழைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (அ)

# அடுத்த வாரத்தில் நாட்டில் வெங்காய விலை குறையும்!

கொழும்பு, டிசெ. 16

அடுத்த வாரம் நாட்டில் வெங்காயத்தின் விலை குறைவடையும் என வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏ.எம்.பி.எம். அத்தப்பத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பண்டிகைக் காலத்தில் வெங்காயத்தின் தேவை அதிகரித்துள்ள நிலையில் மூன்று மாதங்களுக்கு பெரிய வெங்காயத்தை வழங்குமாறு இந்திய உயர்ஸ்தானிகரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அடுத்த வாரத்திற்குள் நாட்டுக்கு தேவையான அளவு வெங்காயம் கிடைத்துவிடும் என்பதால் வெங்காயத்தின் விலை குறைவடையும்-என்றார். (அ)

# 6 கிலோ ஆமை இறைச்சியுடன் பாசையூரில் ஒருவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், டிசெ. 16

யாழில் சுமார் 6 கிலோ கிராம் ஆமை இறைச்சியுடன் ஒருவர் நேற்று பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

பாசையூர் பகுதியில் நபர் ஒருவர் ஆமை இறைச்சியுடன் நடமாடுவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# தரமற்ற மருந்துகள் இறக்குமதி; முன்னாள் செயலர்மீது சந்தேகம்

கொழும்பு, டிசெ. 16

தரமற்ற ஹியுமன் இமியுனிகுளோபியுலின் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ததில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்தவின் நடவடிக்கை நீதிமன்றத்திற்கு சந்தேகத்திற்குரியது என மாளிகாகந்த நீதவான் நீதிபதி லோச்சனி அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளுக்கு தரமற்ற மனித இம்யூனோகுளோபுலின் ஊசி மருந்துகளை கொள்வனவு செய்து விநியோகித்தமை தொடர்பான வழக்கு நேற்று முன் தினம் மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அங்கு, குறித்த மருந்தை விநியோகித்த நிறுவனத்தின் உரிமையாளரும், மருத்துவ வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளருமான மருத்துவர் கபில விக்கிரமநாயக்க மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சுகாதார அமைச்சின் நான்கு அதிகாரிகள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

அப்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பில் விசாரணையின் முன்னேற்றம் குறித்து தெரிவித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, கேள்விக்குரிய மனித இம்யூனோகுளோபுலின் ஊசியின் தரம் தொடர்பான தேசிய மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆய்வு அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாக தெரிவித்தார்.

இந்நிலையில் தரமற்ற ஹியுமன் இமியுனிகுளோபியுலின் தடுப்பூசிகளை கொள்வனவு செய்ததில் சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்தவின் நடவடிக்கை நீதிமன்றத்துக்கு சந்தேகத்திற்குரியது என மாளிகாகந்தை நீதவான் நீதிபதி லோச்சனி அபேவிக்ரம தெரிவித்தார்.

எனவே, பொதுமக்களுக்கு தரம் குறைந்த மருந்துகளை பெற்றுக்கொடுத்தமைக்கு மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்காக இதற்கு காரணமான சகல தரப்பினரையும் பாகுபாடு இன்றி கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன், குறித்த விநியோகஸ்தர் மூலம் மருத்துவ விநியோக திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட மேலும் 04 வகை மருந்துகளையும் அப்புறப்படுத்துமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும் சந்தேகநபர்கள் ஜவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# ஒருவரை கொல்ல முயற்சி; இரு சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, டிசெ. 16

ஒருவரை நோக்கி துப்பாக்கியால் சுட்டபோது அது இயங்காததால் ஒருவர் உயிர் தப்பினார். இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள், கொழும்பு - வெல்லம்பிட்டி - உமாகிலியா விளையாட்டரங்கு அருகே மோட்டார் சைக்கிளில் வந்து ஒருவரை துப்பாக்கியால் சுட முயன்றனர். அந்தச் சமயம் துப்பாக்கி இயங்கவில்லை. இதனால், இலக்கு வைக்கப்பட்ட நபர் உயிர் தப்பினார்.

அங்கிருந்து தப்பிய சமயம் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தடுப்பு பிரிவினரின் சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் கொலன்னாவை பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் 25 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும், சந்தேகநபர்களிடம் 7.5 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளில் மோட்டார் சைக்கிள், 02 மன்னா கத்திகள், ஒரு பொம்மை கைத் துப்பாக்கி, 7 கைபேசிகளை பொலிஸார் அவர்களிடம் கைப்பற்றனர். வெல்லம்பிட்டி ஆனந்தராம மாவத்தையில் வசிக்கும் 31 வயதுடைய ஒருவரையே அவர்கள் கொல்ல முயன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல்மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வடக்கில் யாழ்ப்பாணத்திலேயே டெங்கு நோயாளர்கள் அதிகம்!

## இதுவரை மூவர் உயிரிழப்பு!!

யாழ்ப்பாணம், டிசெ. 16

வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகூடிய டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக மாகாணத்தின் டெங்கு நிலைமை தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தின்போது தெரியவந்துள்ளது.

அத்துடன், யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலால் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன், 2192 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற மீளாய்வு கூட்டத்தின் போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை தொடர்பிலும், டெங்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்துவதில் சுகாதார துறையினர் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பிலும் அதிகாரிகளால் ஆளுநருக்கு எடுத்துக் கூறப்பட்டது. (அ)

# வெதுப்பக பொருட்களின் விலை அதிகரிக்கப்படும்!

கொழும்பு, டிசெ. 16

நாட்டில் இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் முட்டை, சீனி மற்றும் வெங்காயத்தின் விலையை குறைக்க அரசாங்கம் தலையிடாவிட்டால், பாண் தவிர்ந்த பேக்கரிப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

இதற்கமைய, பாண் தவிர்ந்த பேக்கரிப் பொருட்களின் விலை பத்து ரூபாவினாலும், கேக் கிலோ ஒன்றின் விலை நூறு ரூபாவினாலும் அதிகரிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முட்டையின் விலை 60 ரூபாவாகவும், ஒரு கிலோ சீனி 305 ரூபாவாகவும், ஒரு கிலோ உப்பு 400 ரூபாவிலிருந்து 500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமையே இந்த விலை உயர்வுக்கு காரணம்.

குறிப்பாக சந்தையில் முட்டை மற்றும் சீனியின் விலை அதிகரிப்பினால் எதிர்வரும் கிறிஸ்மஸ் காலத்தில் குறைந்த விலையில் கேக் கிடைக்கும் வாய்ப்பை மக்கள் இழக்க நேரிடும்.

கிறிஸ்மஸ் உள்ளிட்ட பண்டிகைக் காலம் முடியும் வரை இந்தியாவில் இருந்து முட்டைகளை இறக்குமதி செய்ய பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

முட்டை மற்றும் சீனி முக்கியமாக பேக்கரி பொருட்களுக்கு தேவைப்படுவதுடன், மீன் ரொட்டி, முட்டை ரொட்டி, கட்லட், பஜ்ஜி போன்ற சிற்றுண்டிகளின் உற்பத்திக்கு வெங்காயம் இன்றியமையாதது. இந்த பொருட்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளமையினால் பேக்கரி உரிமையாளர்களால் வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

## பெரமுனவின்...

அரங்கில் நடைபெற்றது.

இதில், கட்சி தலைவருக்கான பதவிக்கு மகிந்த ராஜபக்ஷவின் பெயரை காமினி லொக்குகே முன்மொழிந்தார். இதனை ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ வழிமொழிந்தார்.

இதைத் தொடர்ந்து புதிய தலைவருக்கு சபையின் அங்கீகாரம் பெறப்பட்டது. இதையடுத்து சிறீ லங்காக பொதுஜன பெரமுன கட்சியின் தலைவராக மீண்டும் மகிந்த ராஜபக்ஷ தெரிவானார். (ஐ)

## மயிலத்தமடுவை...

தொடர் போராட்டத்தில் பங்கேற்கவும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் ஆகியோர் தலைமையிலான குழு நேற்று வெள்ளிக்கிழமை அங்கு சென்றது. இவ்வாறு அவர்கள் அங்கு சென்ற போது, வளமண்டி பாலத்தில் வீதித் தடையை ஏற்படுத்தி சிங்கள குடியேற்றவாசிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்துக்கு அம்பிட்டிய சுமண ரத்ன தேரர் தலைமை தாங்கியிருந்தார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செய்தியாளர்களுடன் பேசிய போது அங்கு வந்த சுமண ரத்ன தேரர் கூச்சலிட்டதுடன், அங்கு குழப்பத்தையும் ஏற்படுத்தினார்.

இதையடுத்து, அங்கு நின்ற பொலிஸார் கஜேந்திரகுமார் தரப்பினர் அங்கிருந்து மேற்கொண்டு செல்ல முடியாத வாறு தடையை ஏற்படுத்தினர்.

இதையடுத்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றே ஜனாதிபதி செயலாளரை தொடர்பு கொண்டு விடயத்தை தெரிவித்தார். இந்த நாட்டில் யாரும் எங்கும் செல்வதற்கு அனுமதி உண்டு என்றும், நீங்கள் மயிலத்தமடு செல்லலாம் என்றும் தெரிவித்திருந்தார். இதையடுத்து, பொலிஸ் உயர் தரப்பும் அனுமதி வழங்கியது.

ஆனாலும், மயிலத்தமடுவுக்கு சென்ற தமிழ் எம். பிக்களையும் அவர்களுடன் சென்றவர்களையும் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அத்துடன், ஜனாதிபதி கடந்த ஒக்ரோபரில் எடுத்த தீர்மானத்தின்படி யாரும் அங்கு செல்ல முடியாது என்று குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளரின் கவனத்துக்கு கஜேந்திரகுமார் எம். பி. கொண்டுவந்தார். "உங்களை யாரும் மறிக்க முடியாது" என்று கூறி தொடர்பை நிறுத்தியிருந்தார் அவர். எனினும், பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதையடுத்து மீண்டும் ஜனாதிபதியின் செயலரை தொடர்பு கொண்டபோது அவர் கஜேந்திரகுமாரின் அழைப்பை ஏற்கவில்லை.

இதைத் தொடர்ந்து கஜேந்திரகுமார் தரப்பினர் சுமார் ஒன்றரை மணி நேரம் காத்திருந்து பலனின்றி திரும்பினர்.

இதேசமயம், மயிலத்தமடு - மாதவனை பகுதியை தமிழ் மக்கள் பாரம்பரியமாக தமது கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாகப் பயன்படுத்தி வந்தனர். இந்த நிலையில், அப்பகுதியில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையால் திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் ஏற்படுத்தப்பட்டது. இந்தக் குடியேற்றத்தை அகற்றுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணித்திருந்தார். இது போன்று நீதிமன்றமும் உத்தரவிட்டிருந்தது. ஆனாலும், இந்தக் குடியேற்றம் தொடர்ந்தும் அங்குள்ளது. இந்த நிலையில், தமக்கு தீர்வு பெற்றுத் தருமாறு கோரி தமிழ் பண்ணையாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டம் நேற்று 90ஆவது நாளை எட்டியிருந்தது - என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காணியை...

அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். அத்துடன், காணியை வழங்க முடியாது எனக் கடிதம் எழுதி கையொப்பமிட்டு வழங்கினர். இந்நிலையில் நில அளவை திணைக்களம் அங்கிருந்து திரும்பிச் சென்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நகுலேஸ்வரம் (ஜே/226), காங்கேசன்துறை (ஜே/233) கிராம சேவகர் பிரிவுகளில் 12.0399 ஹெக்ரெயர்( 29 ஏக்கர்) நிலம் அளவீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

ஆழ்வான்மலையடி, வேலர்காடு, புண்ணன்புதுக்காடு, பத்திராயான் மற்றும் புதுக்காடு, சோலைசேனாதிராயன் என அழைக்கப்படும் தோம்பு பகுதிகளிலேயே இந்தக் காணி அளவீட்டுப் பணி நடைபெறவிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாம்...

ராஜபக்ஷ.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது. அங்கு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவே அடுத்து ஆட்சி அமைக்கும். முன்பை விட பலமான அரசாங்கத்தை நாம் அமைப் போம். எந்தத் தேர்தல் நடந்தாலும் - அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெறுவோம். சிறீ லங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தை உருவாக்கத் தயாராவோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## மக்களும்...

அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சமூக வலைத்தளங்கள் மூலம் எமக்கு சேறு பூசினார்கள். அதற்கு இன்று மக்கள் பதிலளித்துள்ளார்கள். நாட்டில் எந்தவொரு தலைவருக்கும் பிரபாகரனுடன் நேருக்கு நேராக மோத முடியாமல் போனது. ஒருசில தலைவர்கள் பிரபாகரனுக்கு ஆயுதங்களை கொடுத்தார்கள். அந்த ஆயுதங்களின் மூலம் எமது அப்பாவி மக்கள் கொல்லப்பட்டார்கள்.

நாம் இந்த நாட்டுக்கு சமாதானத்தை உருவாக்கிக் கொடுத்தோம். நாட்டு மக்களின் முன்னிலையில் எம்மை தவறானவர்களாக சித்தரிக்க சிலர் முயற்சிக்கின்றனர். நாடு பொருளாதார ரீதியில் பெரும் வீழ்ச்சியை சந்தித்திருந்தபோது நாம் ஆட்சியை பொறுப்பேற்றோம்.

கொரோனா தொற்றுப் பரவல் எனும் பெரும் சவாலை நாம் வெற்றிகொண்டோம். நாட்டை சரியான பாதையில் முன்னோக்கி கொண்டுசெல்ல அரசியல் சக்தி அவசியம். அவ்வாறு நாட்டின் பிரபலமான அரசியல் சக்தியாக பொதுஜன பெரமுன விளங்குகிறது. எமது சக்தியை மேலும் பலப்படுத்த நாம் நாட்டு மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் அழைப்புவிடுக்கிறோம்.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் அதிக வரிகள் மற்றும் மின்சாரம், தண்ணீர் கட்டணங்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும். சில அரசியல்வாதிகள் இளைஞர்களை ஏமாற்றி தமது அரசியல் நோக்கங்களை அடைய முயற்சிக்கின்றனர். அவர்கள் சர்வதேச அழுத்தத்தில் சிக்கி தங்கள் நாட்டுக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தி வருகின்றனர். இதனால்தான் அன்றும் இன்றும் இலங்கைக்கு கொடுக்கப்படும் அழுத்தங்கள் குறையவில்லை.

நாட்டின் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய ஒரே கட்சி சிறீ லங்கா பொதுஜன பெரமுனவாகும் என்பதை நம்பிக்கையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நாம் புதிய நாட்டுக்காக புதிய பயணத்தை இன்று முதல் ஆரம்பிக்கிறோம். நாம் அனைத்து தேர்தல்களையும் வெற்றிகொள்வோம். எமது அழைப்பு கிடைக்கும்வரை சில கட்சியினர் காத்திருக்கிறார்கள் - என்றார்.

## அமைச்சர்...

பிரிட்டனின் வேர்ஜின் தீவுகளில் உள்ள இரண்டு நிறுவனங்களுக்கு சொந்தக்காரர் என்பதை புலனாய்வு பத்திரிகையாளர்களின் சர்வதேச கூட்டமைப்பான பண்டோரா பேப்பர்ஸ் வெளியிட்டுள்ளது.

200இற்கும் மேற்பட்ட நாடுகளில் அரசியல்வாதிகள், பிரபலங்கள், வணிகர்கள் மற்றும் குற்றவாளிகளின் நிதி ஒப்பந்தங்கள் மற்றும் மறைக்கப் பட்ட சொத்துக்களை அம்பலப்படுத்தும் வகையில் பண்டோரா ஆவணம் பல விடயங்களை வெளியிட்டு வருகின்றது.

இதன்படி 2006 இல் சுமார் 9 இலட்சத்து 60 ஆயிரம் டொலருக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் ப்ரொம்ப்டன் ப்ரொப்பர்டீஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை வாங்கினார். 2008 ஆம் ஆண்டு பான்ஹாம் வென்ச்சர்ஸ் லிமிடெட் என்ற இரண்டாவது நிறுவனத்தை வாங்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கசிந்த ஆவணங்களில் உள்ள ஒர் அறிவிப்பின்படி, பி.வி.ஐ நிறுவனங்களுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்பட்ட நிதி, ஒரு தொழிலதிபராக டிரான் அலஸிடம் இருந்து வந்ததை காட்டுகின்றது. (ஐ)

## பொதுமக்களின்...

மக்கள் அவர்களை திருப்பி அனுப்பினர்.

பொன்னாவெளி பிரதேசத்தில் சுண்ணக்கல் அகழ்வு இடம்பெற்றால் எமது கிராமமே அழிந்து விடும் என்று தெரிவித்து வரும் ஊர் மக்கள் தொடர் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்று சுண்ணக்கல் அகழ்வு பணிகளை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கும் பொருட்டு கனிய வளத் திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபையின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் அங்கு சென்றிருந்தனர். இவர்களுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து மக்கள் கூடினர். அத்துடன், போராட்டத்தையும் மேற்கொண்டனர்.

மக்களின் கடும் எதிர்ப்பால் தமது ஆய்வை நிறுத்தி அதிகாரிகள் அங்கிருந்து சென்றனர். (ஐ)

## 3,100 டெங்கு...

டெங்கு நோய் தாக்கம் தொடர்பாக நேற்று மாலை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், வடக்கில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 600 டெங்கு நோயாளர்களும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஏனைய நோயாளர்களும் இனங்காணப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஒரு மாதகாலப்பகுதியில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. இதன்படி கடந்த வாரத்தில் 2 மரணங்கள் நிகழ்ந்தன. அதில் ஒருவர் யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்டவர். மற்றையவர் வல்வெட்டித்துறையை சேர்ந்தவராவார்.

வடக்கு மாகாணத்தில் டெங்கு நோய் தாக்கம் தொடர்பான முறைப் பாடுகள், ஆலோசனைகள் குறித்த விபரங்களை அறிந்துகொள்ளவும் தெரிவிக்கவும். அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (076 179 9901) இது 24 மணித்தியாயல சேவையாக காணப்படுவதுடன், முறைப்பாடுகளை வட்ஸ் அப் மூலம் வடமாகாண சுகாதார திணைக்களத்திற்கு அறிவிக்கமுடியும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## தீர்வு விடயத்தில்...

அம்சங்கள் வருமாறு -

**தமிழரசு தலைமை**

எழுதிக் கொண்டுவந்து வாசித்து தலைவர்களை நியமித்த பாரம்பரியத்தை மாற்றி முதன்முதலாக ஜனநாயக பண்பியல்புக்கு ஏற்ப தமிழரசு கட்சி தலைவர் பதவிக்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இது ஆரோக்கியமான போட்டி. இதன் மூலம் தமிழரசு கட்சிக்கு திறமையான தலைவர் தெரிவாவார். இந்த ஜனநாயக தலைமையை மக்களும் ஏற்றுக்கொள்வார்கள். நான் கட்சியின் தலைவராவேன் என்று 100சத வீதம் நம்புகிறேன். சுமந்திரன் கட்சித் தலைவராக தெரிவானாலும் அவரின் கீழ் கட்சிக்கான செயல்பாடுகளை இன்னும் முழு வீச்சுடன் இணைந்து செயல்பட தயாராக உள்ளேன் - என்றார்.

**நாம் இந்தியாவை நெருங்கவில்லை**

இனப் பிரச்னைக்கான தீர்வு விடயத்தில் நாம் இன்னும் இந்தியாவை நெருங்கவில்லை. மோடி அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை வளர்க்க வேண்டிய தேவை தமிழரசு கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் உண்டு. இதனை அண்மையில் நான் புதுடில்லிக்கு சென்றபோது உணர்ந்திருந்தேன்.

இந்தப் பயணம் புதுடில்லிக்கான முதல் பயணமாக அமைந்திருந்தது. அங்கு சென்றபோதுதான் புதுடில்லியிலுள்ள இந்திய கொள்கை வகுப்பாளர்கள், புத்திஜீவிகளை நாம் இன்னும் அண்மிக்கவில்லை - எமது பிரச்னைகள் அவர்களுக்கு எட்டவில்லை என்பது தெரிந்தது. மோடி அரசுடன் நெருக்கமான உறவை வளர்க்க வேண்டிய தேவை தமிழரசு கட்சிக்கு உண்டு. எமது ஏனைய கட்சிகளுக்கும் உண்டு.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் நாங்கள் எள்ளளவும் இந்தியாவை அணுகவில்லை. அதனால் ஏற்பட்ட வெற்றிடம் புதுடில்லி பயணத்தின் போது தெரிந்தது. நாங்கள் புதுடில்லியில் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடிய தரப்புகளை சந்தித்தோம். ஈழத் தமிழர்கள் தொடர்பில் அவர்கள் மத்தியில் எதிரான மனநிலையே காணப்பட்டது. எங்கள் உண்மையான பிரச்னைகளையும் இங்கு நடக்கும் ஆக்கிரமிப்புகளையும் அவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டிய நிலைமையே இருந்தது. நாங்கள் புதுடில்லியில் பணி மனை ஒன்றை அமைத்து அங்கு முகாமிட்டிருக்க வேண்டிய தேவை இருக்கின்றது. நான் தமிழரசு கட்சியின் தலைவரானால் முதலில் ஆரம்பிப்பது இந்த வேலையைத்தான். இன்றைய நிலையில் இது எங்களின் தேவையும்கூட.

அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளுடன் நாம் எவ்வளவு அன்னியோன்யமான தொடர்புகளை வைத் திருந்தாலும் இந்தியாவை புறந்தள்ளி அவர்களால் இங்கு எதுவும் செய்ய முடியாது. சமாதான காலத்தில் சமரச பேச்சுக்கான தூதுவராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் நோர்வேயிலிருந்து இலங்கை வந்தபோது புதுடில்லிக்கு சென்றேன வந்தார். இதேபோன்று இலங்கையிலிருந்து திரும்பும்போதும் புதுடில்லிக்கு சென்றே நோர்வே சென்றார். இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் மேற்குலகு எதுவும் செய்யாது என்பது இதிலிருந்தே தெளிவாகிறது.

என்னுடன் உயர்மட்ட சந்திப்பில் இருந்த அமெரிக்காவின் இலங்கைக்கான முன்னாள் தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் தனது சேவைக்காலம் முடிவடைந்து நாடு திரும்பும்போது என்னைச் சந்தித்தார். அப்போது அவர் என்னிடம், "இந்தியாவுடன் இன்னும் நெருங்கி செயல்படுங்கள்", என்றே கூறிச் சென்றார். நாங்கள் இன்னும் அதனைச் செய்யவில்லை. இந்தியாவில் மோடி அரசு ஆட்சியில் இருக்கும் போதே தமிழர் இனப் பிரச்னைக்கான தீர்வை இந்திய பங்களிப்புடன் எட்டு வது இலகுவானதாக இருக்கும் என்று நம்புகிறோம். இந்த சந்தர்ப்பத்தை நாங்கள் சரியாக பயன்படுத்த வேண்டும் - என்றார்.

சிறீதரன் எம்.பியின் இந்த நேர்காணலை நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு டான் தமிழ் ஒளி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'ஸ்பொட் லைற்' நிகழ்ச்சியில் காணமுடியும். (ஐ)

ஈழநாடு
Eelanadu

## தில்லைநாதனுக்குக் கௌரவம்!





கொழும்பு, டிசெ. 16

இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இணைந்து 24ஆவது தடவையாக நடத்திய சிறந்த ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் விழாவில், அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஊடகத்துறையில் பணியாற்றும் யாழ்ப்பாணம், வடமராட்சி - புலோலியைச் சேர்ந்த மூத்த ஊடகவியலாளர் சின்னத்துரை தில்லைநாதன் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வின் பின்னர், கொழும்பிலிருந்து வெளிவரும் மூத்த ஊடகவியலாளர்களினால் ஊடகவியலாளர் தில்லைநாதன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (அ)

## கிளிநொச்சியில் 394 குடும்பங்கள் சீரற்ற காலநிலையினால் பாதிப்பு!

கிளிநொச்சி, டிசெ. 16

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவி வரும் சீரற்ற வானிலையால் 394 குடும்பங்களைச் சேர்ந்த 1234 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்-

சீரற்ற வானிலையால் கிளிநொச்சியில் 9 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகளே சீரற்ற வானிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில், 54 குடும்பங்களை சேர்ந்த 186 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கண்டாவளை பிரதேச செயலாள் பிரிவில், 340 குடும்பங்களை சேர்ந்த 1048 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்" இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



# இலங்கையில் தாமதமின்றி தேர்தல் நடத்துவதற்கு எப்போதுமே ஆதரவு!

### அமெ. இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் மத்தியூ மில்லர் தெரிவிப்பு

வாஷிங்டன், டிசெ. 16

**இலங்கையில் ஊழல் மோசடிகள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கும், சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலை நடாத்துவதற்கும் தாம் எப்போதும் ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் மத்தியூ மில்லர் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்க செனெட் சபையின் உறுப்பினர்களான பென் கார்டின், ஜிம் ரிச், ராஜா கிருஷ்ணமூர்த்தி மற்றும் பில் ஜோன்ஸன் ஆகியோர் இணைந்து இலங்கையில் ஊழலை இல்லாதொழித்தல் மற்றும் நீதியை அடைதல் ஆகியவற்றை முன்னிறுத்திய பொதுமக்களின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதையும், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதையும் இலக்காகக் கொண்ட இரு கட்சித் தீர்மானமொன்றை செனட் சபையில் முன்மொழிந்துள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் வொஷிங்டனில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இத்தீர்மானத்தை மேற்கோள்காட்டி ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் பேச்சாளர் மத்தியூ மில்லர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கேள்வி - அமெரிக்க செனட் வெளியுறவுக் குழுவினால் முன்மொழியப்பட்டிருக்கும் இருகட்சித் தீர்மானத்தில் 'ஊழலை இல்லாதொழித்தல், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியையும் பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்தல், உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை மேலும் தாமதமின்றி சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் நடாத்துதல் ஆகியவற்றை நிறைவேற்றுவதன் ஊடாக இலங்கை அரசாங்கம் நாட்டுமக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கவேண்டும்' என வலியுறுத்தப்பட்டுள்ளது. இது பற்றிய உங்களது கருத்து என்ன?



பதில் - ஊழல் மோசடிகள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்தல் மற்றும் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலை நடாத்துதல் என்பவற்றுக்கு நாம் எப்போதும் ஆதரவளிப்போம். (அ)

# விசேட வைத்தியர்களின் ஓய்வு வயது 63ஆக அதிகரிக்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, டிசெ. 16

அனைத்து விசேட வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை தொடர்பில் கடந்த ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை எதிர்த்து 176 விசேட வைத்திய நிபுணர்களால் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டப்பட்டது.

நீதிபதிகள் நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகிய இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, அனைத்து வைத்தியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 63 ஆக அதிகரிக்கும் உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)

## கிளிநொச்சியில் கடும் மழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு!



கிளிநொச்சி, டிசெ. 16

கிளிநொச்சியில் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக தருமபுரம், புளியம்பொக்கணை ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

சிலர் தமது இருப்பிடங்களை விட்டு அயலவர்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சிலர் எங்கு செல்வது என தெரியாமல் நிர்க்கதியான நிலையில் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, தர்மபுரம் மத்திய கல்லூரி மற்றும் தர்மபுரம் இலக்கம் ஒன்று பாடசாலைகளுக்குள் மழை நீர் உட்புகுந்தமையால் நேற்று விடுமுறை வழங்கப்பட்டது.

கிராம சேவையாளர்கள் குறித்த பகுதிகளுக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சேகரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ)

## இரணைமடுக் குளத்தின் 12 வான் கதவுகள் திறப்பு!

கிளிநொச்சி, டிசெ. 16

வடக்கு மாகாணத்தின் பெரிய நீர்ப்பாசனக் குளங்களின் ஒன்றான இரணைமடுக் குளத்தின் 12 வான் கதவுகள் திறக்கப்பட்டன.

நீரேந்து பிரதேசங்களில் இருந்து அதிக நீர் வருகை காரணமாக நேற்று அதிகாலை 2.30 மணியளவில் வான் கதவுகள் படிப்படியாக திறக்கப்படும் என நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்திருந்தது.

அந்த வகையில் 12 வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இரணைமடுக் குளத்தின் கீழ் தாழ்வான பிரதேசங்களில் வாழும் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என மாவட்ட அனைத்து முகாமைத்துவ பிரிவினர் தெரிவித்தனர்.

இதேபோல் கனகாம்பிகைக் குளம், கல்மடுக் குளம், பிரமந்தனாறு குளம், அக்கரையான் குளம், புது முறிப்புக் குளம், வன்னேரிக் குளம் மற்றும் குடமுருட்டிக் குளம் ஆகிய குளங்கள் தற்போது வான் பாய்ந்த வண்ணம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.12.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு




# பாகிஸ்தானுடனான டெஸ்ட் ஆஸி. 487 ஓட்டங்கள் குவிப்பு!

பெர்த், டிசெ. 16

பாகிஸ்தானுக்கு எதிராக முதல் இனிங்ஸில் 487 ஓட்டங்களை குவித்துள்ளது அவுஸ்திரேலிய அணி. பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் ஆடி வரும் பாகிஸ்தான் 132 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை இழந்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸதிரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணிக்கு வோர்னர் - கவாஜா இணை சிறந்த தொடக்கம் அளித்தது. முதல் விக்கெட்டுக்காக இருவரும் 126 ஓட்டங்களை பகிர்ந்திருந்தனர்.



முதல்நாளில் வோர்னர் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி 164 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்திருந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது, 84 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 346 ஓட்டங்களை அவுஸ்திரேலியா சேர்த்திருந்தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கியபோது மிற்செல் மார்ஷ், அலெக்ஸ் கேரி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இதில் மிற்செல் மார்ஷ் அரைச் சதம் அடித்தார். சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட மார்ஷ் 90 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்திய அலெக்ஸ் கேரி 34 ஓட்டங்களிலும், அடுத்து களம் இறங்கிய ஸ்ரார்க் 12 ஓட்டங்களிலும், கம்மின்ஸ் 9 ஓட்டங்களிலும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில், அவுஸ்திரேலிய அணி 113.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 487 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் தரப்பில் அமீர் ஜமால் 6 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் பாகிஸ்தான் அணி நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது 53 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 132 ஓட்டங்களை பெற்றிருந்தது.

அப்துல்ல ஷபிக்யூ 42, ஷான் மசூத் 30 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். இமாம் உல ஹக் 38, குர்ரம் சஷாட் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

மிற்செல் ஸ்ரார்க், நதன் லயன் இரு விக்கெட்களை வீழ்த்தினர். (ஐ)



# 2024 ஐ. பி. எல். தொடரில் ரிஷப் பந்த் ஆடுவார்?

புதுடில்லி, டிசெ. 16

ஐ. பி. எல். 2024 தொடரில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவராக ரிஷப் பந்த் களமிறங்குகிறார் என்று வலுவாக எதிர்பார்க்கப்படுகிறது.

கார் விபத்தில் ஆபத்தான காயங்களுடன் உயிர் தப்பிய ரிஷப் பந்த் 2023 ஐ. பி. எல். தொடரில் ஆடவில்லை. இந்திய அணிக்காக உலகக் கிண்ணத்திலும் ஆடவில்லை.

இந்நிலையில், காயங்களில் இருந்து மீண்டுள்ள ரிஷப் பந்த் ஐ. பி. எல். கிரிக்கெட் ஆடுவார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ. பி. எல். வீரர்கள் ஏலம் வரும் 19ஆம் திகதி நடக்கவுள்ளது. இதற்கான ஆலோசனை கூட்டத்தில் ரிஷப் பந்த் பங்கேற்றார். இதையடுத்தே அவர் மீண்டும் ஐ. பி. எல்லில் ஆடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

கடந்த ஆண்டு ரிஷப் பந்த் விளையாடததால் டேவிட் வோர்னர் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை வழிநடத்தியிருந்தார். 14 போட்டிகளில் 5 வெற்றிகளை மட்டுமே பெற்றிருந்த அந்த அணி 9ஆவது இடத்தைப் பெற்றிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இந்தியா - தென்னாபிரிக்கா இருபது - 20 தொடர் சமநிலை

ஜொகன்னர்ஸ்பேர்க், டிசெ. 16

தென்னாபிரிக்கா - இந்திய அணிகளின் இருபது - 20 போட்டி 1 - 1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் இருபது - 20 தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது ரி- 20 ஓவர் போட்டி மழையால் கைவிடப்பட்டது. இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. மூன்றாவது போட்டி ஜொகன்னர்ஸ்பேர்க்கில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இந்திய அணிக்கு ஜெய்ஸ்வால் - ஷுப்மன் கில் களமிறங்கினர். இதில் ஷுப்மன் கில் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்த நிலையில் அடுத்து வந்த திலக் வர்மா (0) ஓட்டம் எதுவுமின்றி பிடி கொடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்த சூரியகுமார் யாதவ் நிலைத்து நின்று ஆடி சதம் விளாசி அசத்தினார். ஜெய்ஸ்வால் அரைச்சதத்தைக் கடந்து 60 ஓட்டங்களில் பிடி கொடுத்து வெளியேறினார்.

இறுதியில் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்களை இழந்து 201 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து 202 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி தென்னாபிரிக்க அணி விளையாடியது. தொடக்கத்தில் இருந்தே விக்கெட்களை இழந்து தென்னாபிரிக்க அணி தடுமாறியது. அந்த அணியில் அதிகபட்சமாக டேவிட் மில்லர் 35 ஓட்டங்களும், மார்க்ரம் 25 ஓட்டங்களும் அடித்தனர்.

இறுதியாக தென்னாபிரிக்க அணி, 13.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 95 ஓட்டங்களில் சுருண்டது. இதன் மூலம் இந்திய அணி 106 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அதோடு, இந்த வெற்றியின் மூலமாக 3 போட்டிகள் கொண்ட டி-20 தொடரை 1-1 என்ற கணக்கில் இந்திய அணி சமன் செய்தது.

# இங்கிலாந்துடனான டெஸ்ட்; இந்திய மகளிர் சாதனை!

மும்பை, டிசெ. 16

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய மகளிர் அணி முதல் நாள் ஆட்டம் முடிவில் 94 ஓவர்களில், 7 விக்கெட்கள் இழப்புக்கு 410 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்தது.



நவி மும்பையில் உள்ள பட்டேல் மைதானத்தில் நடக்கும் இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய மகளிர் அணி தொடக்க விக்கெட்களை விரைவாக இழந்தது.

ஸ்மிருதி மந்தனா 17 ஓட்டங்களில் லாரன் பெல் பந்திலும், ஷபாலி வர்மா 19 ஓட்டங்களில் கேத் கிராஸ் பந்திலும் போல்ட் ஆகினர். இதையடுத்து சதீஸ் சுபாவுடன் இணைந்த ஜெமிமா ரோட்ரிக்ஸ் இன்னிங்ஸை கட்டமைத்தார்.

சிறப்பாக விளையாடிய சுபா 76 பந்துகளில், 13 பௌண்ட்ரிகளுடன் 69 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சோபி எக்லெஸ்டோன் பந்தில் ஆட்டமிழந்தார். ஜெமிமா ரோட்ரிக்ஸ் 99 பந்துகளில், 11 பௌண்ட்ரிகளுடன் 68 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கேத் கிராஸ் பந்தில் போல்ட் ஆனார். இந்த ஜோடி 3ஆவது விக்கெட்டுக்கு 115 ஓட்டங்கள் சேர்த்தது. இதன் பின்னர் அணித் தலைவி ஹர்மன்பிரீத் கவுருடன் இணைந்து விக்கெட் காப்பாளரான யஸ்திகா பாட்டியா ஆட்டத்தை முன்னெடுத்தார்.

இதனால் இந்திய அணி 61வது ஓவரில் 300 ஓட்டங்களை கடந்தது. ஹர்மன் பிரீத் கவுர் 81 பந்துகளில், 6 பௌண்ட்ரிகளுடன் 49 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன் அவுட் ஆனார். யஸ்திகா பாட்டியா 88 பந்துகளில், ஒரு சிக்ஸர், 10 பௌண்ட்ரிகளுடன் 66 ஓட்டங்கள் எடுத்து சார்லி டீன் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். இதன் பின்னர் களமிறங்கிய தீப்தி சர்மா அதிரடியாக விளையாடினார். இதனால் 89.1-வது ஓவரில் இந்திய அணி 400 ஓட்டங்களை எட்டியது.

இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 88 வருடங்களுக்கு பிறகு முதல் நாள் ஆட்டத்தில் 400இற்கும் மேற்பட்ட ஓட்டங்களை குவித்த 2ஆவது அணி என்ற சாதனையை படைத்தது இந்திய மகளிர் அணி. இதற்கு முன்னர் 1935-ம் ஆண்டு நியூஸிலாந்து அணிக்கு எதிராக கிறைஸ்ட்சர்ச்சில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்டத்தில் 431 ஓட்டங்கள் குவித்து சாதனை படைத்திருந்தது.

தீப்தி சர்மாவுக்கு உறுதுணையாக விளையாடிய ஸ்னே ராணா 30 ஓட்டங்களில் நாட்ஸ்கிவர்-பிரண்ட் பந்தில் போல்ட் ஆனார்.

முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் இந்திய மகளிர் அணி 94 ஓவர்களில், 7 விக்கெட்கள் இழப்புக்கு 410 ஓட்டங்கள் குவித்தது.

தீப்தி சர்மா 95பந்துகளில், ஒரு சிக்ஸர், 9 பௌண்ட்ரிகளுடன் 60 ஓட்டங்களும், பூஜா வஸ்த்ராகர் 4 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# சூர்யகுமார் யாதவ் புதிய சாதனை!

ஜொகன்னர்ஸ்பேர்க், டிசெ. 16

சர்வதேச இருபது - 20 போட்டிகளில் அதிக சதம் அடித்த வீரர் என்ற பெருமையை ரோஹித் சர்மா, மக்ஸ்வெல்லுடன் பகிர்ந்துள்ளார் சூர்யகுமார் யாதவ்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது போட்டியில் சூர்யகுமார் அதிரடி சதம் அடித்து அசத்தினார். இது அவரின் நான்காவது இருபது - 20 சதமாகும்.

சர்வதேச இருபது - 20 போட்டியில் அதிக சதம் அடித்த வீரர்களின் பட்டியலில் ரோஹித், மக்ஸ்வெல் ஆகியோர் முதலிடத்தில் உள்ளனர். இந்த சதத்தின் மூலம் சூர்யகுமார் யாதவ் அவர்களுடன் முதலிடத்தை பகிர்ந்துகொண்டார்.

ரோஹித் சர்மா 148 போட்டிகளில் 4 சதங்களும் மக்ஸ்வெல் 100 போட்டிகளில் 4 சதங்களும் சூர்யகுமார் யாதவ் 60 போட்டிகளில் 4 சதங்களும் அடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# COP28 கரிம உமிழ்வு இலக்கு:

## உலக நாடுகளை செயற்கைக்கோள் மூலம் கண்காணிக்க முடியுமா?

நவீன் சிங் கட்கா

துபாயில் நடந்த **COP28** காலநிலை உச்சிமாநாட்டில் பங்கேற்பாளர்கள் புதைபடிம எரிபொருள் தொழில்நுட்பங்களை படிப்படியாக வெளியேற்றுவது பற்றி வாதிடுவதால், வாக்குறுதிகளுக்கும் உண்மைக்கும் இடையே எப்போதும் இடைவெளி இருப்பதாக விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

இவ்வாறு, நாடுகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதை நாம் எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்? மேலும் உண்மையான நிலைமையை அளவிடுவதற்கு செயற்கைக் கோள்கள் நமக்கு உதவக்கூடுமா?

ஐ.நா சுற்றுச்சூழல் அமைப்பின் 2016ஆம் கரிம உமிழ்வு அறிக்கை வெளியீட்டின்போது, செய்திகளில் வோக்ஸ்வேகன் உமிழ்வு ஊழல் இருந்தது.

அதன் பல வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுவதை உணர்ந்து, சிறந்த மாசு அளவீடுகளுக்கு அவற்றின் நடத்தையை மாற்றக்கூடிய தொழில்நுட்பத்துடன் பொருத்தப்பட்டிருப்பதால், ஜெர்மன் வாகன உற்பத்தியாளரான இந்த நிறுவனம் அமெரிக்காவில் உமிழ்வு சோதனையைக் கையாளுகிறது.

“ஒரு கார் உற்பத்தியாளர் உலகை ஏமாற்றினால், நாடுகளும் நிறுவனங்களும் தங்கள் உமிழ்வுகளை நேர்மையாகப் புகாரளிக்கின்றன என்பதை நாம் எப்படி உறுதிப்படுத்துவது?”

“நாங்கள் அதை வானத்திலிருந்து உறுதி செய்வோம்” என்று ஒரு ஐ.நா சுற்றுச்சூழல் அமைப்பின் அதிகாரி ஒருவர் கூறினார். ‘யார் என்ன செய்கிறார்கள் மற்றும் அவர்களின் கரிம உமிழ்வுகளின் நிலை பற்றி அவர்கள் சொல்வது சரிதானா என்பதை செயற்கைக்கோள்கள் நமக்குக் காண்பிக்கும்,” என்று அவர் கூறினார்.

ஆனால், அது உண்மையில் சாத்தியமா?

தற்போது, பூமியின் சுற்றுவட்டப் பாதையில் சுமார் 20 செயற்கைக்கோள்கள் உள்ளன. அவை பசுமைக்குடில் வாயுக்களை கண்காணிக்கப் பயன்படுகின்றன. ஆனால், முக்கிய விண்வெளி ஆய்வு நிலையங்களைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்தத் தொழில்நுட்பங்கள் இன்னும் நமது தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

ஒரு கண்டம் போன்ற பரந்த பரப்பளவில் கரிம வாயுவின் செறிவுகளை செயற்கைக்கோள்கள் மூலம் கண்டறிய முடியும். இருப்பினும், கரிம வாயுவின் உற்பத்தி எங்கு நிகழ்கிறது என்பதைத் துல்லியமாகக் கண்டறிய அவற்றால் முடியாது.

ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்திற்குச் சொந்தமான சென்டினெல்-5 ப்ரீகர்சர் என்ற செயற்கைக்கோள் தற்போது முற்றிலும் பசுமைக்குடில் வாயுக்களை கண்காணித்து வருகிறது. அந்த செயற்கைக் கோளை வைத்து, மின் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள் போன்ற பசுமைக்குடில் வாயுக்களின் உற்பத்தி இடங்களை அடையாளம் காணும் முயற்சியை மேற்கொண்டதாக ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தின் யஸ்கா மெய்ஹெர் விளக்கினார்.

இருப்பினும், அந்த வாயுக்களின் உற்பத்தி இடங்களைத் துல்லியமாக அடையாளம் காணும் நிலையை “நாம் இன்னும் அடையவில்லை” என்றும் யஸ்கா மெய்ஹெர் தெரிவித்தார்.



ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சி மையத்திலும் இதே நிலைதான். அவர்களுடைய நிபுணர்களில் ஒருவரான ஒசாமு ஒகியாய் என்னிடம் பேசியபோது, “நாம் ஒரே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதுதான் இதற்குக் காரணம். செயற்கைக்கோள்களில் ஒரே சென்சார் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறோம். ஆகவே, கரிம வாயுவின் மூலாதாரத்தைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாக உள்ளது,” என்று கூறினார்.

**கரிம வாயுவின் மூல ஆதாரத்தை கண்டறிவது ஏன் கடினம்?**

கரிம வாயு ஏற்கெனவே மிகுதியாக இருப்பதுதான் முதன்மைப் பிரச்னை. வளிமண்டலத்தில் கரிம வாயு 1,000 ஆண்டுகள் வரை நீடித்து நிலைத்திருக்கக் கூடும். இந்நிலையில் இயற்கையாக ஏற்கெனவே வளிமண்டலத்தில் இருக்கும் கரிம வாயு, புதிதாகச் சேரும் கரிம வாயுவை தனித்து அடையாளப்படுத்துவதைக் கடினமாக்குகிறது.

புதைபடிம எரிபொருட்களை எரிப்பது, காடுகளை அழிப்பது போன்ற மனித நடவடிக்கைகளால்தான் 75 வீத பசுமைக்குடில் வாயுக்கள் வெளியாகின்றன. ஆனால், “புதைபடிம எரிபொருளை எரித்து தனிப்பட்ட மின் உற்பத்தி நிலையங்கள் வெளியிடும் அத்தகைய கரிம வாயு, ஏற்கெனவே வளிமண்டலத்தில் இருக்கும் பெரியளவிலான கரிம வாயுவுக்குள் புதைந்துவிடுகிறது,” என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் காபர்நிகஸ் வளிமண்டல கண்காணிப்பு சேவை மையத்தின் துணை-இயக்குநர் ரிச்சர்ட் எங்கெலென் கூறுகிறார்.

“நாங்கள் தொழிற்சாலைகள் வெளியிடும் கரிம வாயு சிறு சிறு அளவில் கசிவதைக் கண்டறிய முனைகிறோம். ஆனால், செயற்கைக்கோள்கள் சுற்றும் பகுதியில் கரிம வாயு முற்றிலுமாக இல்லாமல் இருந்தால் மட்டுமே அவற்றைக் கண்டறிய முடியும். இத்தகைய நிலை அரிதாகவே நிகழ்கிறது,” என்று அவர் குறிப்பிடுகிறார்.



கரிம வாயுவைவிட மீத்தேன் போன்ற அதிக சக்தி வாய்ந்த வாயுவை அடையாளம் காண்பது செயற்கைக் கோள்களுக்கு எளிது. ஏனெனில், அவை கரிம வாயுவைப் போல் பரவலாகப் பரவியிருக்கவில்லை.

உதாரணமாக, எண்ணெய்க் குழாய்களில் இருந்து கசியும் மீத்தேன் வாயுவை, அரசின் விண்வெளி ஆய்வு மையங்களும் செயற்கைக்கோள்களை இயக்கும் தனியார் நிறுவனங்களும் கண்டறிந்து அதிகாரிகளுக்குத் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியம் 2026இல் இரண்டு செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த திட்டமிட்டுள்ளது. அவை இந்தச் சிக்கல்களைக் களையும் என்றும் நம்பப்படுகிறது.

“கரிம வாயுவின் கசிவுகளைக் காண, கார்கள், மின் உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றின் உயர் வெப்பநிலை எரிப்பு செயல்முறையின்போது கரிம வாயுவுடன் உமிழப்படும் நைட்ரஜன் ஆக்சைட் வாயுவை அளவிடக் கூடிய ஒரு கருவியை நாங்கள் இப்போது செயல்படுத்தியுள்ளோம்,” என்று ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த மெய்ஹெர் கூறுகிறார்.

“நைட்ரஜன் ஆக்சைட் வாயுவை பார்த்தால், அதற்கும் மேலே கரிம வாயு இருக்க வேண்டும் என்பது நமக்குத் தெரியும். எனவே அது கரிம வாயுக் கசிவுகளைக் கண்டறிய உதவுகிறது.”

இதுமட்டுமின்றி, செயற்கைக்கோள் மூலம் சேகரிக்கப்படும் தரவுகளை அலசும் கணினி மாதிரிகளை உருவாக்குவதன் மூலம் கரிம வாயுவை அடையாளம் காணும் முயற்சியையும் விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர்.

நாசா செயற்கைக்கோள்கள் போன்ற சுற்றுவட்டப் பாதையில் சுற்றி வரும் கரிம ஆய்வகங்கள் கரிம வாயுவின் மூலாதாரங்களை நேரடியாக அளவிடுவதில்லை. ஆனால், செயற்கைக்கோள்களில் இருந்து கிடைக்கும்






தரவுகளைப் பயன்படுத்தும் அதிநவீன கணினி அடிப்படையிலான தரவு உருவகப்படுத்துதல் மாதிரிகளை நாங்கள் பயன்படுத்துகிறோம்,” என்று 28வது காலநிலை உச்சிமாநாட்டின்போது தொடங்கப்பட்ட நாசாவின் பசுமைக்குடில் வாயு ஆய்வு மையத்தைச் சேர்ந்த ஆர்கிரோ கவ்வாடா விளக்குகிறார்.

இருப்பினும், முடிவுகள் நம்பகமானதாக நிரூபிக்கப்படவில்லை. ஆகவே, கரிம உமிழ்வைக் கணக்கிடுவதற்கு, அரசுகள் கள அடிப்படையிலான ஆய்வகங்கள், தொழிற்சாலைகளின் அறிக்கைகள் ஆகியவற்றையே சார்ந்துள்ளன. இதில் சில சூழல்களில், இந்தத் தரவுகள் பழையனவாகவோ முழுமையடையாத ஒன்றாகவோ இருந்துவிடுகின்றன.



கடந்த 2015ஆம் ஆண்டின் பாரிஸ் காலநிலை உடன்படிக்கையில், உலக நாடுகள் பூமியின் சராசரி வெப்பநிலையை 1.5 டிகிரியில் தக்க வைக்கும் முயற்சியில் கரிம வெளியீட்டைக் குறைக்க உறுதிபூண்டன. பூமி ஏற்கெனவே 1.1 டிகிரி வெப்பமாகியுள்ளது.

கரிம உமிழ்வு இதே நிலையில் தொடர்ந்தால், 2040ஆம் ஆண்டுக்குள் 1.5 டிகிரி வெப்பநிலையை அடைந்துவிடக்கூடும் என்று காலநிலை மாற்றத்திற்கான சர்வதேச இடை அரசுக் குழு எச்சரித்துள்ளது.

இந்த நிலையில், உலக நாடுகள் ஐ.நா.வில் ஒப்புக் கொண்ட தங்கள் காலநிலை செயல்திட்டத்தின்படி செயல்படுகின்றனவா என்பதைக் கடுமையாகக் கண்காணிக்க எந்தவொரு செயல்முறைம் நம்மிடம் இன்னும்



ஏற்படுத்தப்படவில்லை.

விண்வெளியில் இருந்து பூமியை அவதானிப்பதை ஒருங்கிணைக்கும் சர்வதேச கூட்டமைப்பைச் சேர்ந்த பூமியை அவதானிக்கும் செயற்கைக்கோள்கள் குறித்த கமிட்டி, செயற்கைக்கோள்களின் தொழில்நுட்பத்தில் ஏற்படவுள்ள முன்னேற்றங்கள் இதற்கு உதவக்கூடும் என்று நம்புகிறது.

இந்த கமிட்டி, கள அடிப்படையிலான அறிக்கைகள் மற்றும் செயற்கைக்கோள் ஆய்வுகள் ஆகிய இரண்டும் ஒன்றிணைந்து வெளிப்படையான கண்காணிப்பு மற்றும் உறுதிப்படுத்தல் செயல்முறை உருவாகும் என்றும் அது அரசுகள் தங்கள் வாக்குறுதியை நிறைவேற்றுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் என்றும் நம்புகின்றது.

ஆனாலும், ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த யஸ்கா மெய்ஹெர் என்னிடம் கூறியது போல்: “நாம் இன்னும் அந்த நிலையை அடையவில்லை.”

# தமிழர் தாயகம் இலங்கையில் எரிந்து கொண்டிருக்கும் போது உலகத் தமிழர் பேரவை பிடில் வாசிக்கின்றதா?



தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வொன்றை நோக்கமாகக் கொண்டு செயற்படும் பல அமைப்புகள் மத்தியில்இ குளோபல் தமிழ் ஃபோரம் (GTF) எனப்படும் உலகத் தமிழர் பேரவை (உ.த.பே) வெவ்வேறு புத்த அமைப்புக்களைச் சேர்ந்த மூத்த புத்த பிக்குகள் கொண்ட இலங்கைக்கான "சிறந்த இலங்கை சங்க மன்றத்தை" சந்தித்ததானது, பெரும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது.

பிரித்தானியர்களிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான கடந்த 75 வருடங்களாக தமிழர்கள் படிப்படியாக தங்களுக்கு உரித்தான அனைத்தையும் இழந்து வருகின்றனர். வருகின்றனர். சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியல் வரலாற்றில் பௌத்த மதகுருமார்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. இதன் காரணமாகவேஜ் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் பொருட்டு தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தாமல் இரத்து செய்யப்பட்டன.

இலங்கைத் தீவில் வரலாற்று ரீதியாக வரலாற்று ரீதியாக தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சுழற்சி மற்றும் இனப்படுகொலைக்கான உறுதியான ஆதாரங்கள் உள்ளன. யார் ஆட்சிக்கு வந்தாலும் சிறிலங்கா அரசானதுஇ நாட்டை ஒற்றை இன, ஒரு மொழி, மற்றும் ஒற்றை மத (**mono ethnic, mono lingual, mono religious**) சிங்கள பௌத்த நாடாக மாற்றுவதே ஆட்சியாளர்கள் கொள்கையாக கொண்டுள்ளார்கள். இந்த நிலையில் உ.த.பே உடனான சந்திப்பின் பின்னர் பௌத்த மதகுருமார்கள் வெளியிட்ட பிரகடனத்தில் இலங்கையின் பன்முகத்தன்மையை ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளதானது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் திகைப்பையும் உருவாக்கியுள்ளது. இந்தச் சந்திப்பு தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் அரசியல் யுக்தி கொண்டதா என தமிழ் சமூகம் சந்தேகம் கொள்கின்றது.

எந்தவித கலந்தாலோசனையும் இல்லாமல் ரகசியமாக வைக்கப்பட்ட இமயமலைப் பிரகடனம் "தமிழ் மக்களது எரியும் பிரச்சினைக்கு எண்ணை ஊற்றுவதாக உள்ளது. "இமயமலைப் பிரகடனம்" பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்தாலோசித்து பொதுவெளிக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். இந்தச் சந்திப்புக்கு முன்னர் இந்த விடயம் தமிழர் தரப்பில் எவருடனும் ஆலோசிக்கப்படாமல் திரைமறைவில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

மறுபுறம் **GTF** இதே போன்ற செயற்பாட்டை 2015 இல் ரணில் விக்ரமசிங்கா பிரதமராக இருந்தபோது அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் ஆரம்பித்து, அது ஒட்டுமொத்த தோல்வியில் முடிந்தது. அதன் முழுமையான செயல்முறையும் இலங்கை அரசால் வசதியாக வடிவமைக்கப்பட்ட ஒரு மாயை என்பதை உணர்ந்து கொள்ள உலகத் தமிழர் பேரவைக்கு (**GTF**) 5 ஆண்டுகள் பிடித்தது. **UNHRC** செயல்முறையை இழுத்தடித்து நீர்த்துப் போகச் செய்யவும் கடந்த கால வன்முறைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக சிறிலங்காவினை மறுகட்டமைக்க வேண்டும் என அதிகரித்து வரும் அழுத்தங்களை தந்திரமாக கையாளவும் மைத்திரிபால மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்திற்கு உலகத் தமிழர் பேரவையின் (**GTF**) உதவி தேவைப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தொடர்ச்சியாக பதவியிலிருந்த இலங்கை அரசாங்கங்களின் தோல்வியுற்ற கொள்கைகளால் மீண்டும் மீண்டும் வன்முறை தாக்குதல்கள், கொலை, கொள்ளைகள் மற்றும் சொத்துக்கள் அழித்தல், உயர் மட்ட ஊழல், துஷ்பிரயோகம், குற்றத்திற்கான தண்டனையிலிருந்து விலக்களித்தல், பொருளாதார பின்னடைவு, இராணுவமயமாக்கலுக்கான நிதி விரயம், கடன் பொறி, அதீத அதிகார மையமயமாக்கல், சர்வதேச தனிமைப்படுத்தல் மற்றும் பொருளாதார வங்குரோத்து ஆகியவற்றிற்கான மூல காரணங்களை ஆராய்ந்து நிவர்த்தி செய்யாமல் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்னைகளை ஆழமாக நோக்காமல் மேலோட்டமாக ஒரு அற்பமான விடயமாக கருதினால் அதற்கான நிலைத்து நிற்க்க கூடிய தீர்வு தீர்வு கிட்டப் கிட்டப் போவதில்லை. அரசியலமைப்பு ரீதியாக தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளுக்கு தீர்வு காணாமல், அர்த்தமுள்ள எந்த மாற்றங்களும் அங்கு ஏற்படப் போவதில்லை. பௌத்த சிங்கள பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறாமல், மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சி சிங்கள-பௌத்த மேலாதிக்கம் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் "கல்லிலிருந்து இரத்தம் எடுப்பது" போன்றதாகும். இவர்கள் இனவாதத்தை சிங்கள மக்கள் மீது தூவுவதன் மூலம் நாடாளுமன்றத்திற்குச் செல்வதை உயிர் மூச்சாகக் கொண்டுளனர்.

ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தை ஆராய்ந்து நிகழ் காலத்தை தனக்குச் சாதகமாகக் கையாளுபவர். தமிழர்களின் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்யவும்இ சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் புவுகு இன் சந்திப்பு ரணிலுக்கு வாய்ப்பளிக்கும்.

கடந்த காலத்தை தனக்கு சாதகமாக கையாளும் ரணில் விக்கிரமசிங்கவின் சந்திப்பு, புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுடன் பேசுவதில் வெற்றி என்ற போர்வையில் தமிழர்களின் குரல்களை மூடி மறைத்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு புவுகு இன் சந்திப்பு ரணிலுக்கு வாய்ப்பளித்துள்ளது.

சர்வதேச தலையீட்டை அகற்றி உள்நாட்டின் பொறிமுறைக்குள் முடக்கிவிடும் நோக்கோடு உருவாக்கப்பட்ட உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவிற்கான (**TRC**) சர்வதேச மட்டத்திலான ஆதரவை திரட்டவும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் ரணிலுக்கு இது வாய்ப்பளித்துள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் பலவும் நிரந்தர அரசியல் தீர்வுக்காக தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. 2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் சமாதானத்துடனும், சமத்துவத்துடனும் வாழ்வதற்கான தீர்வினை அடைவதற்காக இந்த அமைப்புக்கள் தங்கள் நேரத்தையும்இ பணத்தையும், உழைப்பையும் கடுமையாகச் செலவிடுகின்றன. இந்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு பொறுப்புக்கூறலை வலியுறுத்துகின்றன. **UNHRC** இன் கடுமையான தீர்மானங்கள் 46ஃ1 மற்றும் 51/1 இற்கு அமைய இலங்கையை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதுடன் (**Sri Lanka Accountability Project - SLAP**), "மேக்னிட்ஸ்கி" (**Magnitsky**) சட்டம் மற்றும் உலகளாவிய மனித உரிமைகள் தடைச் சட்டம் (**Global Human Rights Sanctions Act**) போன்றன மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொடர்ந்து வற்புறுத்துதல், உறுப்பு நாடுகளால் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டங்களை பயன்படுத்தப்பட வேண்டும் என்று பல புலம்பெயர் தமிழ் அமைப்புகள் வலியுறுத்துகின்றன. இலங்கை சுதந்திரமடைந்து கடந்த 75 வருடங்களாக தமிழ் மக்கள் அனுபவித்து வரும் அவல நிலை பற்றிய சர்வதேச சமூகத்தின் பார்வையில் ஏற்படுத்தப்பட்டு வரும் புரிதலினை **GTF** இன் நடவடிக்கையின் விளைவுகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன.

● **OHCHR** ஆல் மேற்கொள்ளப்பட்டு வரும் இலங்கை மீதான பொறுப்புக்கூறல் திட்டத்தை (**SLAP**) பாதிப்படையச் செய்கிறார்கள்.

● சர்வதேச குற்றவியல் விசாரணை பொறி முறைக்கு வழிவகுக்கும் அனைத்து முன் னெடுப்புக்களுக்கும் மாற்றாக உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை (**TRC**) போன்ற ஒரு உள்ளக செயல்முறைக்குள் அடக்குவதே ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவின் முயற்சியாகும்.

● இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா போன்ற உலகத் தலைவர்களை நேரடியாகத் தலையிடச் செய்யும் முயற்சிகள் ஊடாக சமாதானத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்வதற்கு தமிழ் மக்களுக்கு நிலையான அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டும், அத்தகைய தீர்வில் அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் உருவான பல ஒப்பந்தங்களை சிங்கள தரப்புகள் ரத்து செய்ததன் அடிப்படையில், அர்த்தமுள்ள அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டறிவதற்கான எந்தவொரு உள்ளக செயல்முறையிலும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

● இதன் விளைவாக, **GTF** இன் முயற்சி பாதிப்பைக் கொடுக்கும் என்பதோடல்லாமல் தமிழ் அமைப்புகள் கடந்த 15 ஆண்டுகளாக சிரத்தையுடன் உருவாக்கிய தீர்வுக்கான உத்திகளையும் முயற்சிகளையும் நாசமாக்கிவிடும்.

● இலங்கை அரசாங்கமும் ஊடகங்களும் புவுகு இன் பௌத்த மதகுருமார்களுடனான சந்திப்புக்கள் குறித்து செய்து வரும் விளம்பரங்கள் சர்வதேச சமூகத்திற்கு தவறான செய்தியை பரப்பியுள்ளன. தமிழ் மக்கள் தங்களின் நீண்டகால இன்னல்களுக்கு விடிவு காணப் போராடுகிறார்கள். அதற்கு எதிரானதொரு கருவியாகவே இது பயன்படும். சிங்கள பௌத்தர்களின் தயவில் தமிழர்களை கை விட்டு விட்டு, இலங்கையில் சர்வதேச சமூகத்தின் தலையீடு இல்லாத கொள்கையை முன்னெடுக்க ரணில் விக்ரமசிங்கே அரசுக்கு வாய்ப்பாகி விடும்.

இந்த வேளை, **GTF** எந்த விதத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை கேள்விக்குள்ளாக்குவது பொருத்தமானது. புலம்பெயர் தமிழ் 14 அமைப்புக்களின் கூட்டு அமைப்பாக பிரான்சில் புவுகு 2009 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதிலிருந்து, அவற்றில் 13 தமிழ் அமைப்புகள் நாளடைவில் தங்கள் அங்கத்துவத்தை மீளப் பெற்றுவிட்டன.

எனவே, **GTF** பெரும்பான்மையான புலம்பெயர் அமைப்புகளின் கூட்டு முடிவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதே தவறானதாகும். பலத்துடன் செயற்படும் வெவ்வேறு தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் நீதியுடன் கூடிய சமாதானத்துடன் வாழ்வதற்கு உலக நாடுகளின் தலையீட்டைக் கோருகிறார்கள். புவுகு இன் இந்த நடவடிக்கை அந்த ஒற்றுமையை பலவீனப்படுத்தி புலம்பெயர் தமிழர்களை பிளவுபடுத்தி சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் இலங்கை அரசின் திட்டத்திற்கு வகை செய்கிறது.

நாம் யதார்த்தமான வகையில் அனைத்துத் தமிழ் அமைப்புக்களும் சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் சமாதான சகவாழ்வு மற்றும் நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கான காலவரையறையுடன் கூடிய உறுதியான நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டியதுதான் தகுந்த வழியாகும்.

**On behalf of:**
**British Tamils Forum (BTF)**
**Centre de Protections des Droits du Peuple Tamoul-France**
**Irish Tamils Forum (ITF)**
**Solidarity Group for Peace and Justice (SGPJ - South Africa)**
**Swiss Tamil Action Group (STAG)**
**Tamil Movement Against Genocide (Mauritius)**
●